

அரைக்கீரை விதைத் தைலம்

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும் அநேக பச்சிலைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் எரிச்சல், கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

•

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில் நிகரற்றது.

பெரிய பார்களாகவும் சிறு கட்டிகளாகவும் குறைந்த விலையில் கிடைக்கும்.

•

தயாரிப்பவர்கள் :

டி.எஸ்.ஆர். அண்டு கோ., கும்பகோணம்

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைகிராப்ட்ஸ் ரோடு — திருவல்லிக்கேணி

•


பாலக்காட்டுக்கு ஸோல் ஏஜெண்டுகளும்
கோயமுத்தூருக்கு ஸ்டாகிஸ்டுகளும்

தி சதர்ன் இந்தியா ஏஜன்ஸீஸ்

அவநாசி ரோடு — கோயமுத்தூர்

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.



தமிழ்நாடு ஏஜெண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

மேலக் கோபுர வீதி :: மதுரை.

கலியாண காலத்திற் கென்று

புதுமாதிரி புடவைகளும், இதர ஜவுளி தினுசு
களும் ஸ்பெஷலாக தருவிக்கப்பட்டிருக்கின்றன!

ஒவ்வொன்றுக்கும், கெட்டிச் சாயத்திற்கும், நீண்ட
உழைப்பிற்கும் தங்கு தடையில்லா உத்திரவாதம் உண்டு!

புடவைகள்:—எமது சொந்தத் தறியில் கொள்ளேகால் முறுக்குப் பட்டில் தயார் செய்யப்பட்ட நேர்த்தியான பார்டர்கள் புது மாதிரி சம்பமான முகதலைகளுடன் கூடிய 6, 7, 8, 9 கெஜம் சேலைகள், பாவாடைகள் முதலியன.

பெங்களூர் பட்டு சேலைகள்:—ஏராளமான நூதன ரகங்கள், சேலைகள் பாவாடைகள், ரவிக்கைகள் இன்னும் அநேக ஜெக்கட் சில்க் வகையராக்கள்

சரசமான விலையில் சகலரும் வாங்கி உடுத்தக்கூடிய நூல் சேலைகள், பாவாடைகள்
வேஷ்டிகள், துப்பட்டாக்கள், தரமாய் ஏராளமாய் கைவசம் குவிந்துள்ளன!

நேரில் வந்து பாருங்கள்!

மதுரை ஆபீஸ்:
230, கீழமாசி வீதி,
மதுரை.
போன்: 36 Tel: "YESARBIKAY"

SRB


மதராஸ் ஆபீஸ்:
83, நயினியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ்.
Tel: "RENOWN" போன்: 3506

S. R. B. குப்புசாமி அய்யர் & சன்


(FORMERLY S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்)

பிரபல மதுரை, பனாரஸ் ஜவுளி வியாபாரிகள்.

கல்கி



KALKI ஆகஸ்ட் 13, 1944 4 அணா



உங்கள் மனதிற்குகந்த நறுமணம் தொண்டைக்குக் கெடுதல் செய்யாது

டிலக்ஸ் டெனர் சிகரெட்டின் உண்மை மணத்தை நீங்கள் விரும்புவீர்கள். உயர்ந்ததும், அவசியமானதுமான பண்டங்கள் கிராக்கியாய் விற்கும் இக்காலில் கூட இந்த சுகம் நிறைந்த சிகரெட்டுகள் நம்மில் பலர் வாங்கக்கூடிய விலைக்கே விற்கப்படுகின்றன. உத்தரவாதமுள்ள 100% வர்ஜீனியா புகையிலையிலிருந்து தயாரிக்கப்பட்டது டெனர் சிகரெட்டுகள்.

tenor

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லீட், லண்டன்

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA





மும்மணிகளும் — மாணிக்கமும்

திருச்சி ஸ்ரீ நன்றுடையான் விநாயகர் ஆலய திருப்பணி உதவிக்காக

மதுரை ம்யூஸிக் அகாடமியின் ஆதரவில்

15-8-44 செவ்வாய் மாலை 7 மணிக்கு — மதுரை சேதுபதி ஹைஸ்கூலில்

கான கலாதர மதுரை	ஸ்ரீ மணி அய்யர்	—	பாட்டு
கும்பகோணம்	.. ராஜமாணிக்கம் பிள்ளை	—	வயலின்
பாலக்காடு	.. மணி அய்யர்	—	மிருதங்கம்
பழனி	.. சுப்ரமணிய பிள்ளை	—	கெஞ்சிரா

டிக்கெட் :— ரூ. 2, 1. ஸ்திரீகளுக்கு ரூ. 1.

குறிப்பு :— அகாடமி மெம்பர்களுக்கு மட்டும் முதல் வகுப்பு டிக்கெட்டு ரூ. 1.

★

ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸங்கீத ஸபை — திருச்சி

20-8-44 ஞாயிறு மாலை 5-25 மணிக்கு — மலைக்கோவில் நூற்றுக்கால் மண்டபத்தில்

பக்த நாரதர் & பூலோக ரம்பை படப் புகழ்

ஸ்ரீமதி குமாரி ருக்மணி

பரத நாட்டியம் & அபிநயம்



டிக்கெட் :— ரூ. 1-8-0, 1-0-0, 0-8-0. ஸ்திரீகளுக்கு ரூ. 1-0-0, 0-6-0.

செப்டம்பர் 17உ :— ஜி. என். பி. — ராஜமாணிக்கம் — மணி & சுப்புடு

S. G. RATNAM, Organiser.

பல சரக்கு



தாம் முஸ்லிம்களுக்குச் சமர்ப்பித்திருக்கும் புதிய திட்டத்தைப் பற்றி ராஜாஜியவர்கள் சமீபத்தில் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் பேசினார். அவர் பேசி முடித்தபிறகு அக்கிராசனம் வகித்த மாணவர் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்.

“ஐரோப்பாவில் பல நாடுகள் இருப்பதை ராஜாஜி குறிப்பிட்டார். ஆனால் ஐரோப்பாவில் நிலைமை என்ன? பல நாடுகளாகப் பிரிந்திருப்பதினால் தானே இப்படி விபரீத யுத்தம் நடக்கிறது?” என்றார்.



அதற்கு ராஜாஜி, “ஆம், அக்கிராசனர் சொல்வது சரியே. அதற்காகவே தான், பிரிந்து போவதா, வேண்டாமா என்று சர்வஜன வோட்டு எடுக்கு முன் இரண்டு கட்சியாருக்கும் பிரசாரம் செய்ய உரிமை வேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன். அப்பொழுது அக்கிராசனர் போன்றவர்கள் ஐரோப்பா படத்தைக் கையில் எடுத்துக் கொண்டு போய்ப் பிரிந்து போவதில் உள்ள தீமைகளை ஜனங்களுக்கு எடுத்துக் கூறலாம். அப்படியும் அந்த ஜனங்கள் கேட்காவிட்டால் நாம் என்ன செய்யலாம்?” என்றார். ராஜாஜியின் பதிலைக் கேட்டு மாணவர்கள் கரகோஷம் புரிந்தனர்.

★

வைஸ்ராய் வேவல் தளபதி வேவலாய் இருந்த சமயத்தில் ஒரு நாள் களைப்போடு வீட்டுக்கு வந்தார். அவருடைய பெண்கள் மூன்று பேரும் சண்டை போட்டுக்கொண்டிருந்தனர்.



தளபதி வேவல் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவர்களுடைய சண்டை நின்றபாடாயில்லை. கடைசியில் மனம் வெறுத்து “நான் ஒரு வார்த்தை சொன்னால் பல்லாயிரக் கணக்கான வீரர்கள் தலை வணங்குகின்றனர். ஆனால் இந்தப் பெண்கள் என்ன சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறார்கள்” என்று சொன்னாராம்.

பிடில் வாத்தியம் வாசிப்பதில் திருக்கோடி காவல் கிருஷ்ணையரின் அபார திறமை பிரசித்தியானது. ஆனால், யானைக்கும் அடி சறுக்குமல்லவா? ஒரு சமயம் கிருஷ்ணையர் பிரமாதமாக வாசித்துக் கொண்டிருந்தபோது, தந்திக் கம்பியின் கோளாறினால் அவர் உத்தேசித்த பிடி தவறி, அபஸ்வரம் விழுந்து விட்டது. சபையில் அத்தனை நேரமும் ஒரு தடவை கூடத் தலையை அசைக்காமல் கல்லாகச் சமைந்து உட்கார்ந்திருந்த ஒரு கர்வியான ரஸிகர், அந்த அபஸ்வரம் விழுந்ததும், “பலே!” என்றாராம். உடனே, கிருஷ்ணையர் வாசிப்பதை நிறுத்திவிட்டு,

“இத்தனை நேரமாய் வாசித்தது சபையோருக்கு; இப்போது வாசித்தது ஐயர்வாளுக்கு!” என்றதும், சபையோர் குதூகலமாகச் சிரித்தார்கள். மேற்படி ரஸிகர் அவமானத்தினால் தலை குனிந்தார்.

★

வின்ஸ்டன் சர்ச்சில் பார்லிமெண்டில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிதில் அவருக்கு ஒரே பயம் — எப்படி பார்லிமெண்டில் முதல் பிரசங்கம் செய்யப் போகிறோம் என்று. பார்லிமெண்ட் கட்டடத்தை நோக்கி அவர் சென்று கொண்டிருந்தபோது,



அவரைப் பார்த்த பிரதம மந்திரி ஸாலிஸ்பரி பிரபு, “தெரியும் எனக்கு! எப்படிப் பிரசங்கம் செய்வது என்று நடுங்கிக் கொண்டிருக்கிறாய். நான் சொல்கிறபடி நடந்தாயானால் பிரசங்கம் செய்வது ரொம்ப ரொம்ப சுலபமாய்ப் போய் விடும்” என்றார். “என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார் சர்ச்சில்.

“உன் பிரசங்கத்தைக் கேட்கிற அத்தனை பார்லிமெண்ட் மெம்பர்களும் முட்டாள்கள் என்று நினைத்துக்கொள். தானாகப் பேச வரும். நான் அப்படி நினைத்துக் கொண்டுதான் பேசுகிறேன்” என்றார் ஸாலிஸ்பரி.

மூரன் சேனையை: பெருந் தொகையாக எதிர்த்து வரும் படைகளை யெல்லாம்; துகளின் நோக்குவான்: சாமானிய தூசி போல் எண்ணுகிறவன்: ஆங்காரமும் இகழ்ச்சியும் சேர்ந்து என்ன பாவங்களை யெல்லாமோ உண்டாக்குகின்றன அவனி டத்தில்! பெருஞ் சிரிப்புச் சிரிக்கிறான்; கண்கள் தீப்பொறி பறந்த மாதிரி விளங் கின்றன. நாசியில் புகை வருவதுபோல் சுவாசம் வருகிறது: போர் செய்யும் வீரன் கையில் வில்லானது எப்படி யெல்லாம் கூத்தாடுமோ அப்படி யெல்லாம் கூத்தாடு கின்றன புருவங்கள்.]

இந்தக் கோபாவேசமே நம்மைப் பய முறுத்தப் போதுமானது. யுத்த சன்னத் தமாய் ஆயுதங்களையும் அணிந்து கொண் டால் எப்படி யிருக்கும்!

கட்டிய கரிகையான்;
கடித்த வாயினன்,

வெட்டிய மொழியினன்,
விழிக்கும் தீயினன்,

கொட்டிய துடியினன்,
குறிக்கும் கொம்பினன்,

இட்டிய தமர்எனக்
நிவர்ந்த தோளினன்


[கட்டிய கரிகையான்: கத்தியை அரையில் கட்டிக்கொண்டான். கடித்த வாயினன்: உதட்டைக் கடிக்கிறான். வெட்டிய மொழி யினன்: பேசத் தொடங்கினால் இடை இடைவெட்டின வார்த்தை வருகிறது. கத்தி கொண்டு மரத்தை வெட்டுவதை நமக்கு நினைவூட்டுகின்றன அந்த வார்த்தைகள். கொட்டிய துடியினன்: கையிலுள்ள உடுக் கையைப் பட பட என்று தட்டுகிறான்; குறிக்கும் கொம்பினன்: ஏதோ விஷயத்தைக் குறித்துக் கொம்பை ஊதுகிறான்.]

குகனுடைய இரண்டு தோள்களையும் பார்த்தால் மலைகள் போல் அபார சக்தி வாய்ந்தவைகளாக இருக்கின்றன. அவ னுக்குப் பக்கபலமாக மற்றுர் யாரும் வேண்டாம்; இரண்டு தோள்கள்தான் இருக்கின்றனவே! என்று சொல்லத் தோன்றும்.

இட்டிய தமர்எனக்
நிவர்ந்த தோளினன்!







72. கொம்பின் முழக்கம்

ராமனை எப்படியும் அயோத்திக்குக் கொண்டு வந்துவிட வேண்டும், அவனையே சக்கரவர்த்தியாகச் செய்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்தோடு அயோத்தியை விட்டு பரதன் புறப்படுகிறான். பரதனிடம் ஆத்திரமிருக்கிறது. அதைவிடத் துயரமே மேலிட்டிருக்கிறது. அங்கேயில் அவனைக் கண்டு உருகாத மக்கள் இல்லை! ஏன், பசுக்களைப் பார்த்தால், மற்றப் பிராணிகளைப் பார்த்தால், மரஞ் செடிகளைப் பார்த்தால் எல்லாம் உருகி நிற்பதாகவே தோன்றுகிறது. அப்படித் தோன்றுவது நாமே அனுபவத்தில் காணும் உண்மை.

பூவிரி பொலன் கழல்ப்
  பொருவில்த் தானையான்
காவிரி நா(டு)அன
  கழனி நா(டு)ஒரீஇத்,
தாவர சங்கமம்
  என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக்,
  கங்கை ஏகினான்.

[பூவிரி பொலன் கழல் பொருவில்த் தானையான்: பூ வேலை செய்த கழலைக் காலில் அணிந்தும் போர் செய்வதற்கான வில்லைக் கையில் ஏந்தியும் விளங்கும் ஒப்பற்ற வீரப் படையை உடையவன் பரதன்; காவிரி நாடு அன கழனி நாடு ஒரீஇ: காவிரி பாயும் சோழ நாட்டை ஒத்து வயல் வளங்கொண்ட பிரதேசத்தை யெல்லாம் கடந்து; தாவர சங்கமம் என்னும் தன்மைய யாவையும்: நிலை நிற்கும் மரங்கள் போன்றனவும் நடந்து திரியும் பசுக்கள் போன்றனவும் ஆகிய எல்லா வஸ்துக்களுமே; இரங்கிட: சோக உணர்ச்சியால் வாடுவது போல் தோன்ற; குறிப்பு:— உயர்ந்த புலமை வாய்ந்தவர்களுக்குத் தங்கள் சொந்த ஊரும் மக்களுமே விஷயமாகும். எவ்வளவு தூரம் போனாலும் சொந்த நாடுதான் கண் முன் நிற்கும். கம்பர் அந்த ரகத்தைச் சேர்ந்தவர். கங்கைப் பிரதேசத்துக்குப் போன போதிலும் காவிரி நாடுதான் கண் முன் நிற்கிறது.]

இப்போது பரதனையும் அவன் சேனையையும் விட்டுக் கங்கையின் எதிர்க் கரைக்குப் போகிறோம். அங்கே ஒரு வீரனைப் பார்க்கிறோம். அவன் பரதனது சேனையைப் பார்க்கிறான். சேனையைப் பார்த்ததும் அவனுக்கு என்ன தோன்றுகிறது?

அப்படை கங்கையை
  அடைந்த ஆயிடை,
துப்புடைக் கடலினீர்
  சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணலோ(டு)
  உடற்ற வேகொலாம்,
இப்படை எடுத்த(து)என்(று)
  எடுத்த சீற்றத்தான்.

[அப்படை கங்கையை அடைந்த ஆயிடை: அந்த பரதனது படை கங்கைக் கரையை அடைந்த மாத்திரத்தில்; துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை: பவளத்தைத் தன்னிடத்தே கொண்டதான கடலின் நீரைச் சுமந்த நீல மேகத்தை; ஒப்புடை அண்ணலோடு உடற்றவே கொலாம் இப்படை எடுத்தது: ராமனோடு போர் செய்யவே இப்படிப் படை எடுத்து வந்த தெல்லாம்; எடுத்த சீற்றத்தான்: பொங்கி எழும் கோபத்துக்குள்ளானான்.]

அப்படிப் பொங்கி எழுந்த கோபத்துக்கு உள்ளானவன் யார்?

குகன்எனப் பெயரிய
  கூற்றின் ஆற்றலான்,
தொகைமுரண் சேனையைத்
  துகளின் நோக்குவான், —
தகைமிகக் கண்கள் தீ
  நாற, நாசியில்
புகையுறக், குனிப்புறும்
  புருவப் போர்வில்லான்

[கூற்றின் ஆற்றலான்: எமனுக்குச் சமானமான சக்தி படைத்தவன்; தொகை

ஜப்பானியப் பிரசாரகர்கள் "இந்தியாவை நாங்கள் விடுதலை செய்வோம்" என்று ஜெபிக்கிறார்கள். தம் சொந்த நாட்டிலேயே ஒரு போதும் சுயேச்சையோடில்லாத மக்கள் இப்படிப்பட்டதோர் வாக்குறுதி கொடுப்பது வெகு அழகுதான். இந்தியா சுயராஜ்யத்தை நாடுகிறது. யுத்தத்திற்குப் பிறகு அதை அடையத்தான் போகிறது. மற்ற ஆசிய மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தவேண்டுமேயொழிய விடுவிக்கக்கூடாது என்னும் எண்ணம் கொண்டுள்ள இராணுவத் தலைவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டுள்ள நாட்டவரின் உதவி எதுவும் இந்தியாவுக்குத் தேவையில்லை.

வெற்றி வழியே விடுதலை

படித்துப் பார்

மகாத்மா காந்தி நினைவு மாலை

[ஆசிரியர்: ஸ்ரீமதி என். அம்புஜம்மாள்; பதிப்பாசிரியர்: வி. ஸ்ரீ.; பிரசுரம்: "தினமணி" காரியாலயம், 100, மவுண்ட் ரோடு, சென்னை; விலை அணா 8.]

மகாத்மா காந்தியைப் பற்றி எத்தனையோ பேர் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். மகாத்மா காந்தி தம்மைப் பற்றியே புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

ஆனால், ஸ்ரீமதி என். அம்புஜம்மாள் இந்த "மகாத்மா காந்தி நினைவு மாலை"யில் எழுதியிருப்பது மகாத்மாவைப் பற்றி யல்ல; பின் யாரைப் பற்றி என்றால், ஸ்ரீமதி என். அம்புஜம்மாளைப் பற்றித்தான்.

ஆகையினால்தான், இந்த நூல் அவ்வளவு சுவாரஸ்யமாயிருக்கிறது.

மகாத்மாவின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் மாதிரி; நம்மில் பெரும்பாலோருக்கு அவரைப் பற்றிச் சகல விவரங்களும் தெரியும்; புதிதாகத் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமிராது.

ஆனால், காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்கார் — சென்னைக் கோட்டையில் சிம்மமாக விளங்கிய தீர புருஷர் — இந்திய அரசியலாகிய கடலைச் சிறிது காலம் சண்டமாருதம் போல் கலக்கிக் கொண்டிருந்த பிரமுகர் — அப்பேர்ப்பட்டவருடைய அருமைக் குமாரி ஸ்ரீமதி என். அம்புஜம்மாளைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? அவர் ஒரு சமயம் தேசத் தொண்டில் ஈடுபட்டுச் சிறை சென்றார் என்பது மட்டுந்தான் தெரியும்.

மற்றப்படி, அவர் சின்னஞ் சிறு குழந்தையாயிருந்த போது மகாத்மாவைக் கதவிடுக்கிலிருந்து பார்க்க முயன்றது நமக்குத் தெரியுமா? தன் கழுத்திலணிந்திருந்த முத்து மாலையைக் கழற்றிக் கொள்ளப் போகிறாரே என்று பயந்து அதைப் பெட்டியில் வைத்தது தெரியுமா? கஸ்தூரி பாயைத் தன்னந் தனியாகப் பெருங் கூட்டத்திலே விட்டு விட்டுப் போனதைப் பார்த்து மகாத்மாவை மனதிற்குள் திட்டியதுதான் தெரியுமா? — தெரியாது! தெரியாது! தெரியாது!

இதைக் கேளுங்கள்:— "நானும் என் தாயாரும் பின்புற அறையில் இருந்தோம். கதவின் இடுக்கு வழியே தான் காந்தியைப் பார்க்க முயன்றேன். அதிலும் சங்கோசம்! குரல் மட்டும் கேட்டது காதுக்கு; தரிசனம் கிட்டவில்லை."

இப்படிக் குழந்தைப் பிராயத்தில் மகாத்மா காந்தியைப் பார்க்க முயன்று ஏமாற்றமடைந்தது முதற் கொண்டு, பின்னால் தந்தையின் கோபத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் மகாத்மாவின்மீது பக்தி பூண்டு, அவருடைய ஆசிரமத்தில் போய்த் தங்கியிருந்து, அவருடைய அன்புக்கும் ஆசிக்கும் பாத்திரமான பின்பு இன்று வரையில் ஸ்ரீமதி அம்புஜம்மாள் தம்மைப் பற்றித்தான் பெரும்பாலும் சொல்லிக் கொண்டே போகிறார். ஆனாலும், அவருடைய புனிதமான மனக் கண்ணின் வழியாக நாம் மகாத்மாவை வெகு நெருக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டே போகிறோம். புத்தகத்தை முடிக்கும் வரையில் மகாத்மாவைத்தான் பார்க்கிறோம். முடித்த பிறகுதான், "ஓ! இது ஸ்ரீமதி அம்புஜம்மாள் தம்மைப் பற்றியே எழுதிக் கொண்டிருக்கும் புத்தகமல்லவா?" என்பது நினைவுக்கு வருகிறது.

அருமையான புத்தகம்; பெரியவர்களைப் பற்றி வரலாறு எழுத விரும்பும் பெரியார்கள் எல்லாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டிய புத்தகம்.

இராகமாலா அல்லது பண்திரட்டு

[இயற்றியவர்: வித்வான் வேலூர் டி. ஏ. சம்பந்தமூர்த்தி ஆச்சாரி; கிடைக்கும் இடம்: கே. என். லோகநாத ஆச்சாரி, 1, முனிசாமி ஆச்சாரியார் வீதி; பெரம்பூர் பேரக்ஸ், சென்னை. விலை அணா 12.]

சித்தரஞ்சனி, சிவரஞ்சனி, வசந்தமனோஹரி, சாரங்கி, சிவாநரங்கினி இந்தப் பெயர்களெல்லாம் நாடகத்திலோ நாவலிலோ வரும் கதாநாயகிகள், தோழிகள் இவர்களின் பெயர்கள் அல்ல; கர்நாடக சங்கீத ராகங்களின் பெயர்கள். இவைகளைப் போல் இன்னும் பல வேறு ராகங்களுக்கு ஆரோகண அவரோகண ஸ்வரங்கள் இந் நூலில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பெண் மனம்

[ஆசிரியர்: ஜோசே லெல்கான்; மொழிபெயர்ப்பு: ப. திருமலை; பிரசுரம்: ஜோதி நிலையம்; திருவல்லிக்கேணி, சென்னை; விலை: 0—10—0]

எப்ரியன் போக்கர் என்ற ஒரு பணக்கார வாலிபன் பெர்த்தா என்ற ஒரு மாதைக் காதலித்து மணந்து கொள்கிறான். திடீரென்று அவனுக்கு ஒரு சந்தேகம் வருகிறது. அவனுடைய காதலைப் பரிசோதிப்பதற்காக அவளை விட்டுப் பிரிகிறான். அதனால், அந்தப் பெண்ணின் உயிர் பிரிகிறது. நாமும் புத்தகத்தை விட்டுப் பிரிகிறோம்.



சைக்கிள்  அகராதி

டி. எஸ். ஸ்ரீதரன்

லைட் :—போலீஸ்காரனைக் கண்டதும் அணைத்துவிட்டு மறுநாள் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் 8 அணா அபராதம் செலுத்த வைக்கும் ஆற்றலுடையது.

செயின் :—நமது வேஷ்டியின் முனை அதன் வாயில் அகப்பட்டுப் பிழைப்பது துர்லபம். வேஷ்டி ஒன்று கிழிந்து போகும், அல்லது கறுப்பு வர்ணம் பூசிக்கொள்ளும். சில சமயம் இரண்டும் நேரலாம்.

'லைசென்ஸ்' :—அதை வாங்கவில்லை என்று நம்மை அதிகாரிகள் பிடிக்கும் போதுதான் பலருக்கு அப்படி ஒன்று வாங்க வேண்டுமென்றே தெரியவரும்.

'ட்யூப்' :—தன் மீது கணக்கிலடங்காத பிளாஸ்திரிகள் போட்டுக் கொள்வதற்கென்றே இப்பூமியில் அவதரித்திருக்கும் ஓர் அபூர்வப் பிறவி.

'வால் ட்யூப்' :—மூர்த்தி சிறியதாயிருந்தாலும், கீர்த்தி பெரியதுதான். ஆனால் "வால்" கிடையாது.

டயர் :—முட்கள், ஆணிகள், கண்ணாடித் துண்டுகள் முதலியவைகளின் ஆத்ம நண்பன்.

'பம்ப்' :—அநேகமாக வாங்கி ஒரு மாதத்திற்கு மேல் உழைப்பது மிகவும் அபூர்வம். அதனிடமிருந்து காசுக்கும் "காற்று வாங்கலாம்."

'ஸீட்' :—ஆண்டி முதல் அரசன் வரை தாராளமாய் உட்காரக் கூடிய ஓர் உயர்ந்த ஆசனம்.

'பெடல்' :—எவ்வளவு மிதித்தாலும் பொறுத்துக்கொள்ளும் ஓர் சாது.

பாதசாரி :—இவருக்கும் சைகிளுக்கும் பதினெட்டுப் பொருத்தம். பாம்புக்கும் கீரிக்கும் உள்ள உறவுதான்.

'பிரேக்' :—பாதசாரிகளையோ லைட் போஸ்டுகளையோ நெருங்கி விட்டால் இது ஒன்று இருப்பதையே நம்மை மறக்க வைத்து ஒரு சரியான 'டாஷ்' கொடுத்து, "தடி முட்டாள்" "இடி மடையன்" "சோம்பேறி" முதலிய பட்டங்களைத் தன் எஜமானருக்குச் சம்பாதித்துக் கொடுக்கும். சில சமயம் நம்மைப் போலீஸ்காரனுக்கும் அறிமுகப்படுத்தி வைக்க வல்லது.

'டாஷ் கொடுத்தல்' :—சைகிளுடன் பிறந்த குண விசேஷங்களில் ஒன்று.

'ரெட் லைட்,' 'கேரியர்,' 'ஸ்டாண்டு' :—இவைகள் சைகிளிலிருந்தால் நலம். இல்லாவிட்டால் குடி முழுகி விடாது.

கவனிக்கவும் :—இக் கட்டுரையைத் தெருவில் படித்துக் கொண்டே போய் ஒரு சைக்கிளின்மீது மோதிக்கொண்டு சுமார் ஒன்னேகால் டஜன் வசவுகளையும், இரண்டு ஜதை குத்துக்களும் வாங்கிக்கொண்டால் அடியேன் ஜவாப்தாரி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குடும்ப பாரம்!



"எதற்காக ஐயா யுத்தத்தில் சேர்ந்தீர்?"
"எல்லாம் இந்தக் குடும்ப பாரம் தாங்காமல்தான்."

பத்மினியைப் பார்த்ததும்தான் அவனுக்குத் தன் நினைவு வந்தது. "ஸ்டேஷனுக்குப் போய் விட்டு வந்தேளா? ஐயோ பாவம்! நாங்கள் திடீரென்று காரிலேயே புறப்பட்டு வந்து விட்டோம். கடிதம் எழுத அவகாசமே இல்லை. சரி, உள்ளே வாங்கோ, அவளை நீங்கள் பார்க்க வேண்டாமா?" என்று பத்மினி தன் கணவனை உள்ளே அழைத்துக்கொண்டு சென்றாள். அங்கே பஞ்சாபி உடை உடுத்த பொம்மைகளும், பற்பல விளையாட்டுச் சாமான்களும் புடை சூழ ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முதுகு மாத்திரம்தான் துரைசாமிக்குத் தெரிந்தது. "என்ன? சீக்கப் பெண் மாதிரின்னா இருக்கு! உங்க அத்தை பெண் என்றாயே, அது இல்லையா?" என்று கேட்டான்.

அவன் குரலைக் கேட்டதுதான் தாமதம், அப் பெண் திடுக்கிட்டுத் திரும்பியது. துரைசாமியைக் கண்டதும் அந்தப் பெண் தன் கையிலிருந்த பொம்மையைக் கீழே எறிந்துவிட்டு, "அப்பா!" என்றலறிக் கொண்டு அவன் ஏந்திக் கொண்டிருந்த கரங்களுள் பாய்ந்தாள். "மாலதி, என் கண்ணே!" என்று அவளை அணைத்துக் கொண்டான், துரைசாமி. அவனால் அதற்கு மேல் பேச முடியவில்லை. தொண்டை யடைத்துக் கொண்டது. உடலில் வேர்வை ஆறாய் ஓடியது. மாலதியைத் தனது அணைப்பிலிருந்து விடுவித்துப் பத்மினியின் பக்கம் திரும்பினான். பத்மினி கண்களில் ஆனந்த பாஷ்பம் வடிய இக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். துரைசாமி பாய்ந்து போய் அவள் கரங்களைப் பற்றிக் கொண்டான். "பத்மினி! பத்மினி! இந்தக் குழந்தையை உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று நாக்குழறக் கேட்டான்.

பத்மினி குறும்பாய்ச் சிரித்துக் கொண்டே, "யார் சொல்ல வேண்டும்? ஒரு பத்தினி தன் கணவனுடைய சந்தோஷத்தைத்தானே கோருவாள்?" என்றாள்.

"கண்ணு! இந்தத் தாயில்லாக் குழந்தையிடம் நீ காட்டிய அன்புக்கு நான் என் உயிரைக் கொடுத்தாலும் போதாது!" என்று சொல்லும்போது துரைசாமியின் குரலில் நன்றி ததும்பியது.

"நன்றாயிருக்கு! தாயில்லாக் குழந்தையா? ஒரு வாரமாய் அவளுக்குத் தாயாயிருந்தது யாராம்?" என்றாள் பத்மினி. அப்பொழுது அவள் குரலில் பெருமை தொனித்தது.

நடக்கப் போகிறது. அன்று நான் 'டான்ஸ்' ஆடப் போகிறேன். அதற்கு நீங்கள் கட்டாயம் வாருங்கள்!" என்ற வாக்கியங்கள் மீண்டும் அவள் நினைவுக்கு வந்தன. சரிதான், அதற்குத்தான் ஆசாமி மைசூர் போயிருக்கிறார். ஆம், இன்றுதான் பத்தாம் தேதி. இப்பொழுது அவர் தன் பெண்ணுடன் கொஞ்சிக் கொண்டும் குலாவிக்கொண்டுமிருப்பார்.



அவர் விமலாவின் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சும் பொழுதெல்லாம், "ஐயோ, இதுமாத்திரம் என் மாலதியாயிருந்தால்!" என்று எவ்வளவுதரம் நினைத்திருப்பார்! தனக்கு ஒரு குழந்தை இருந்தும் அதைத் தன்னுடன் வைத்துக்கொள்ளாமல் அனாதையாய் விட்டிருப்பது எவ்வளவு கொடுமை! இந்தத் தியாகத்தை அவர் தன் பொருட்டுத் தான் செய்திருக்கிறார் என்பதை நினைக்க நினைக்க அவள் மனம் தன்னையும் மீறி துரைசாமியின் மேல் அனுதாபம் கொண்டது. அவள் தன் கட்டிலில் படுத்துக் கொண்டு எதிரே மாட்டியிருக்கும் தன் கணவனின் போட்டோவைப் பார்த்தாள். அவனது புன்னகை ததும்பும் இன்முகம் அவள் மனதை இளக்கியது. ஏதோ தீர்மானத்துக்கு வந்தவள் போல், "சரி, அப்படியே ஆகட்டும்" என்று அவள் வாய் முணுமுணுத்தது.

துரைசாமி மைசூரிலிருந்து வந்து ஒரு மாதமாய் விட்டது. தன் கணவனின் இரகசியம் தனக்குத் தெரிந்ததாகவே பத்மினி காண்பித்துக்கொள்ளவில்லை. ஒரு நாள் இருவரும் விமலாவின் குழந்தைக்கு உடம்பு சரியாயில்லையென்று கேள்விப்பட்டு அவள் குழந்தையைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். விமலாவின் கணவன் குழந்தையைத் தன் தோளின்மேல் சாத்திக்கொண்டிருந்தான். விமலா அவன் பக்கத்தில் உட்கார்ந்து ஏதோ ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். பத்மினி துரைசாமியைப் பார்த்தாள். அப்பொழுது துரைசாமியின் மனத்தில் தோன்றிய சிந்தனைகளை அவன் முகம் பளிங்கு போல் காட்டியது. 'தன் மாலதிக்குக்கூட இந்த மாதிரி ஜுரம் வந்தால், யாரைக் கூப்பிடுவாள்? அப்பா வைத்தானே! இந்த மாதிரி அவளை யார் அருமையாய்த் தோளில் தூக்கிக் கொண்டு ஒத்தடம் கொடுப்பார்கள்? யாரோ முன்பின் அறியாத காசுக்கு வேலை செய்யும் ஒருத்தி தண்டத்திற்குக் கவனிப்பாள். ஒருக்கால் அந்த ஜுரமே அவளுக்கு யமனாயிருந்தால்...... தாயும் தகப்பனுமில்லாத அனாதையாக அல்லவா அவள் உயிரைத் துறப்பாள்?'— துரைசாமியையும் மீறி எழுந்த விம்மல் பத்மினியின் காதுகளில் விழாமற்போகவில்லை.

அன்று இரவு இருவரும் சாவகாசமாய் உட்கார்ந்திருக்கும்பொழுது அவள், "என்ன, எனக்கு ரொம்ப நாளாகவே ஒரு விஷயம் சொல்லணும்னு. என்னுடைய அத்தை பெண் ஒருத்தி இரண்டு குழந்தைகளை அனாதையாய் விட்டு விட்டு இறந்து போய் விட்டாள். ஒரு குழந்தையை வேண்டுமானால் எடுத்து வளர்க்கலாமென்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள். சரி என்று சொல்வது போல் துரைசாமி தலையாட்டினான்.

★

பத்மினி ஊருக்குப் போய் ஒரு வாரமாய்விட்டது. அன்றுதான் துரைசாமிக்கு அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அந்தக் கடிதத்தில் தான் அன்று குழந்தையுடன் வருவதாகவும், அவனை ஸ்டேஷனுக்கு வந்திருக்கும்படியும் அவள் எழுதியிருந்தாள். ஆனால் அன்று ரயில் வந்ததேயொழிய பத்மினி வரக் காணோம். ஒருக்கால் அன்று வருவதற்குச் சௌகரியப்படவில்லையோ என்னமோ என்று நினைத்துக் கொண்டு துரைசாமி தள்ளாடிக் கொண்டே வீட்டிற்கு வந்தான். அவன் நினைவெல்லாம் மாலதியிடமிருந்தது. தன்னுடைய மாலதி இருக்க வேண்டிய இடத்தில் இன்னொரு குழந்தை இருக்கப் போகிறது!

கதவைத் தட்டும் பொழுதுகூட அவன் நினைவு அவனிடமில்லை. கதவைத் திறந்து

யிருக்கேன், அப்பா! அடுத்த தடவை என்னைக் கட்டாயம் அழைத்துக் கொண்டு போய்விடுங்கள். நீங்கள் போன தடவை வாங்கிக் கொடுத்த பொம்மைக்கு வாத்தியாரம்மா 'பஞ்சாபி டிரெஸ்' தைத்துக் கொடுத்திருக்காள். நன்றாயிருக்கு. அடுத்த மாதம் பத்தாம் தேதி எங்கள் ஸ்கூலிலே பெற்றோர்கள் தினம் நடக்கப் போகிறது. அன்று நான் 'டான்ஸ்' ஆடப் போகிறேன். கட்டாயம் வாருங்கள்.

இப்படிக்கு,
உங்கள் பிரியமுள்ள,
மாலதி.

இந்தக் கடிதம் பத்மினியின் மனதைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. கடிதம் ஒருக்கால் தவறி வந்து விட்டதோ என்று பாக்கியிருந்த கடிதங்களையும் புரட்டினாள். எல்லாம் குழந்தை மாலதியால் எழுதப்பட்டவை தான். கடைசியில் அகப்பட்ட இரு கடிதங்கள் அவள் சந்தேகத்தை நிவர்த்தி செய்து விட்டன. அந்தக் கடிதங்களில் ஒன்றில்,

நாதா,

இந்தக் கடிதம் உங்கள் கைக்குச் சேர்வதற்கு முன் என் உயிர் இறைவனடியைச் சேர்ந்து விடும். நம் மண வாழ்க்கையைப் பற்றி நாம் கட்டிய கோட்டைகள் ஒரு நிமிஷத்தில் தகர்ந்து விடும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. சீமையிலிருந்து ஜயத்துடன் திரும்பி வந்த பிறகு மணம் செய்து கொள்ளலாம் என்று நாம் கொண்டிருந்த ஆசையில் பகவான் மண்ணைப் போடுவார் என்று நான் நினைக்கவேயில்லை. நான் ஒரு நாள் தெரியாமல் செய்த பிழையின் பயனை இப்பொழுது அனுபவிக்கிறேன். குழந்தை மாலதியைப் பார்க்கப் பார்க்க என் மனம் குமுறுகிறது. ஐயோ, உலகம் அவளை எப்படி ஏற்றுக்கொள்ளும்!

நாதா, எனது கடைசி கோரிக்கையை நிறைவேற்றுவீர்களா? என்ன நேர்ந்தாலும் மாலதியைக் கைவிடாதீர்கள். உங்கள் மனதிற்குகந்த பெண்ணை மணம் செய்து கொள்ளுங்கள். ஆனால் மாலதி என்று ஒரு குழந்தை உங்களுக்கு இருப்பதாகவே அவளுக்குத் தெரிய வேண்டாம். குழந்தை மாலதியை மாத்திரம் கைவிடாதீர்கள்.

இப்படிக்கு
உங்கள் அன்புள்ள
விமலா.

இந்தக் கடிதத்தைப் பத்மினி பன்முறை படித்தாள். அவள் தலை சுழன்றது.

★

பத்மினி இவ்வாறு எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தாளோ, அது அவளுக்குத் தெரியாது. அவள் தலையை நிமிர்த்திய பொழுது கண்களினின்றும் கண்ணீர் வருவது நின்றுவிட்டது. அப்படி அழுதது அவளுக்கு ஒரு சுமையை இறக்கினது போலிருந்தது. அவள் முகத்தில் புயலடித்து ஓய்ந்தாற்போல் ஓர் அமைதி நிலவியது. கண்களைத் துடைத்துக் கொண்டு கடிதங்களை இருந்த இடத்திலேயே வைத்தாள். மாலதியின் கடிதத்தைப் பார்க்கும்பொழுது அவளுக்கு ரொம்ப பரிதாபமாயிருந்தது. அந்தக் கடிதத்தை மறுபடியும் பார்க்கும்பொழுது, விமலாவின் குழந்தை [illegible] ஆண்டு நிறைவன்று வந்த கடிதம் இதுதான் என்பது விளங்கிற்று. ஐயோ பாவம்! இந்தக் குழந்தைக்குத்தான் இந்தச் சின்ன வயதிலேயே எவ்வளவு கஷ்டம்! தகப்பன் நல்ல நிலைமையிலிருந்தும் அதை அனுபவிக்க இந்தக் குழந்தை கொடுத்து வைக்கவில்லை யல்லவா!

"அப்பா, அடுத்த மாதம் பத்தாம் தேதி எங்கள் ஸ்கூலின் பெற்றோர்கள் தினம்



ஞர்கள். உண்மையிலேயே பத்மினிக்கு ஒரு குறைச்சலு மில்லைதான். பத்மினி ஒரு போலீஸ் கமிஷனரின் செல்வப் புதல்வி. துரைசாமியும் பெரிய இடத்துப் பிள்ளைதான். அவன் ஒரு பாங்கில் மானேஜிங் டைரக்டராக இருந்தான். மாம்பலத்தில் பெரிய பங்களா, சொந்தக் கார் எல்லாம் இருந்தது. வாழ்க்கை சந்தோஷகரமாக இருப்பதற்கு ஒரு மனிதனுக்கு என்னென்ன வேண்டுமோ அவ்வளவும் அவர்களுக்கு இருந்தது. ஆனால் கலியாணமாகி ஏழு வருடங்களாகியும் குழந்தை யொன்று பிறக்கவில்லையே என்ற குறை ஒன்றுதானிருந்தது.

பார்ப்பவர்க ளெல்லாம் அவர்களுடைய அதிர்ஷ்டத்தைப் பாராட்டினார்கள். ஆனால் பத்மினிக்கோ அந்தச் செல்வம் வேப்பாய்த்தா னிருந்தது. தான் இவ்வளவு நல்ல நிலைமையில் இருந்துதான் என்ன பிரயோஜனம்? இவ்வளவு செல்வத்தையும் சேர்த்துத்தான் என்ன பயன்? தான் அநுபவிக்கும் அவ்வளவு சந்தோஷமும் தன் குழந்தையின் 'குவா'வென்று அழும் சத்தத்தைக் கேட்டு மகிழும் அந்தச் சந்தோஷத்திற்கு ஈடாகுமா என்று அவள் நினைத்துக் கொள்வாள்.

ஒருநாள் பத்மினி தனது குறையை டாக்டரிடம் சொன்னாள். டாக்டரும் அவள் குறை தீர்வது கஷ்டம்தான் என்று சொல்லி விடவே, பத்மினிக்கு வாழ்க்கை கசந்து விட்டது. எவ்வளவுதான் மனத்தினுள்ள வருத்தத்தைப் பாராட்டக் கூடாது என்று திடம் செய்து கொண்டாலும், தன்கணவன் பிறர் குழந்தைகளைத் தூக்கிக் கொஞ்சும் பொழுது அவளால் வருத்தப்படாமலிருக்க முடியவில்லை.

★

விமலாவின் குழந்தைக்கு ஆண்டு நிறைவு கழிந்து பத்துப் பதினைந்து நாட்களாய் விட்டன. துரைசாமி ஆபீஸ் விஷயமாக மைசூருக்குப் போயிருந்தான். அன்று அவனுடைய அறைக்குள் நுழைந்ததும், பத்மினியின் பார்வை மேஜையின் பக்கம் சென்றது. துரைசாமி மேஜை டிராயரின் வாயிலேயே சாவியை மறந்து வைத்து விட்டுப் போயிருந்தான். அப்பொழுது அவளுக்கு அந்த டிராயரில் என்னென்னதான் வைத்திருக்கிறார் பார்ப்போமே என்ற ஆவல் தோன்றியது. டிராயரைத் திறந்தாள். ஒரு மூலையில் ஒரு கட்டுக் கடிதங்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. கட்டைப் பிரித்து மேலாக இருந்த கடிதத்தைப் பிரித்தாள். அக் கடிதத்தி லெழுதப்பட்டிருந்த எழுத்து எழுதத் தெரியாத ஒருவர் கஷ்டப்பட்டு எழுதினது போலிருந்தது. ஒவ்வொரு அக்ஷரமும் கொட்டை கொட்டையாயிருந்தது. கோணலுமாணலுமாய் எழுதியிருந்த அழகைப் பார்த்தால் ஒரு குழந்தையின் எழுத்துப்போல் அவளுக்குப் பட்டது. தன்னையுமறியாமல் கடிதத்தைப் பிரித்து வாசித்தாள்:

என் பிரியமுள்ள அப்பாவிற்கு அநேக நமஸ்காரம். இங்கு நான் சௌக்கியமா யிருக்கிறேன். நன்றாய்ப் படிக்கிறேன். வாத்தியாரம்மா என்னிடம் ரொம்பவும் பிரியமா யிருக்கிறார். இருந்தாலும் அப்பா, யாரும் உங்களாட்டமாய்ப் பிரியமா யிருக்க மாட்டார்கள். நீங்கள் எப்பொழுது என்னுடனேயே இருக்கப் போகிறீர்கள்? ஏம்பா, எத்தனையோ பேர் அம்மா இல்லாவிட்டாலும் அப்பாவோடே இருக்காளே! நான் மாத்திரம் ஏன் இருக்கக்கூடாது? நான் நேத்திக்கி எங்கள் வாத்தியாரம்மாவைக் கேட்டதற்கு, 'அவளுக்குப் பிடிக்காது' என்றார்கள். 'அவள்' யாரப்பா? நீங்கள் சரின்னு சொன்னால் அவள் என்னப்பா சொல்லப் போகிறாள்? நான் சமத்தா







அன்னையும் பிதாவும்

"பாரு"

"ஏன்னு, என்ன கடிதம் அது? யாரிடமிருந்து வந்திருக்கிறது? கவரைப் பார்த்தால் எங்கப்பாவிடமிருந்து வந்திருக்கிறது போலிருக்கே" என்று கேட்டுக் கொண்டே பத்மினி உள்ளே நுழைந்தாள்.

அந்தக் கடிதத்தை வெகு ஸ்வாரஸ்யமாய்ப் படித்துக் கொண்டிருந்த துரைசாமி பத்மினியின் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு விட்டான். "ஊம், இந்தக் கடிதமா? இது என் சிநேகிதன் ஒருத்தன் எழுதியிருக்கிறான்" என்று மென்று விழுங்கிக் கொண்டே பதில் சொன்னான்.

"அப்படியா! ஒருக்கால் அப்பாதான் எழுதியிருக்கிறாரோ என்று பார்த்தேன். சரி. நீங்கள் ஆபீஸ் வேலை பார்த்தது போதும்; முதலில் எழுந்திருந்து 'டிரெஸ்'ஸை மாற்றிக் கொள்ளுங்கள். இன்றைக்கு நமக்கு மணியாத்திலே சாப்பாடு என்பது ஞாபகமிருக்கட்டும்."

"ஓஹோ! அவன் பிள்ளைக்கு இன்று ஆண்டு நிறைவு இல்லையா? மறந்தே போய் விட்டேன். இதோ, ஒரே நிமிஷத்தில் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே துரைசாமி உடை மாற்றிக் கொள்ளத் தன் அறைக்குள் சென்றான்.

அன்று மணியின் வீட்டில் ஆண்டு நிறைவு வெகு தடபுடலாக நடந்தது. மணியின் மனைவி விமலாவுக்கு எல்லோரிடமும் தன் அருமைப் புதல்வன் செய்யும் சேஷ்டைகளைப் பற்றிச் சொல்லுவதற்கே பொழுது சரியாயிருந்தது. அவள் பத்மினியைக் கண்டதும், "பத்மினி, உன்னைப் பார்த்தால் எனக்கு நிஜமாகவே பொறாமையாய்த்தானிருக்கு! உனக்கென்ன குறைச்சல்? கவலையா? விசாரமா? ஆத்துக்காரருக்கு நல்ல வேலையாச்சு. உனக்கும் குழந்தையென்னும் குட்டியென்னும் விசாரமில்லை. என்னைப் பார். இந்த மூன்று குழந்தைகளையும் கட்டி மேய்ப்பதற்குள் போதும் போதுமென்றாய் விடுகிறது. அதுவும் இந்தக் கடைசிப் பயல் இருக்கிறானே, அவன் மகா விஷமக்காரன். வைத்த சாமான்களை வைத்த இடத்திலிருக்க விடமாட்டேனென்கிறான். அவனைக் கவனிக்க ஒரு ஆள் வேண்டியிருக்கிறது. இதோ பார். அவன் உங்க ஆத்துக்காரரை என்ன பாடு படுத்துகிறான் என்று. ஐயோ! பேனாவைத் தூக்கி அவன் கையில் கொடுத்திருக்கிறாரே, உடைத்து விடப் போகிறான்! டேய் சரு! பேனாவை மாமாவிடம் கொடு, உடைத்து விட்டாயானால் மாமா அடிப்பார்!" என்று சொல்லி வாய் மூடுவதற்குள் சரு பேனாவை வீசி எறிந்துவிட்டான். சரு பேனாவை விட்டெறிந்ததுதான் தாமதம், துரைசாமி சிரித்துக் கொண்டே அவனைக் கட்டியணைத்து முத்தமிட்டான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பத்மினி நீண்ட பெருமூச்சு விட்டாள்.

★

"உனக்கென்னடியம்மா குறைச்சல்? உன்னைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாயிருக்கு" என்ற வார்த்தைகள் பத்மினியின் காதுகளில் விழுந்து விழுந்து புளித்துப் போய் விட்டன. பத்மினியைப் பார்க்கிறவர்களெல்லாம் அப்படித்தான் சொன்



கிழப்பருவத்தில் 50% உபகாரத் தொகை

வேலைசெய்த காலமெல்லாம் சென்று, ஓய்வெடுக்கும் நாள்களும் வந்தே தீரும் என்பதை உணரும் ஒவ்வொருவரும் தன் வயது முதிர்ந்த தள்ளாத காலத்தில் உபயோகிக்கப் பணம் சேர்ப்பது இயற்கை. மனமிருந்தால் ஒழுக்கமுள்ள ஒருவன் எவ்வளவு வேண்டுமானாலும் சேர்க்கலாம். மாதங்கள் ஆக ஆக, சேரும் தொகையும் கூடக் கூட அந்தச் சேமிப்பைக் காணுவதில் உண்டாகும் ஆனந்தமே அலாதி.

முதல் ரூ. 500ஐச் சேர்த்து வைப்பதுதான் கடினமென்று சொல்லுகிறார்கள்; இதன்பின் சேர்த்து வைப்பவருக்கு அது ஒரு வழக்கமாய் விடுகிறது. இப்பழக்கம் பணக்காரராவதற்கு உதவுகிறது. உங்கள் முயற்சிகளைக் கொண்டு செய்வதைவிட ஒன்றுக்கு ஒன்றரையாக லாபமடையும் வழி இதோ இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் பத்து ரூபாய் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்குங்கள். பன்னிரண்டு வருஷங்களில் ஒவ்வொரு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டும் உத்திரவாதமுடன் ரூ. 15 பெறும். உங்கள் கிழப்பருவத்திற்காக சேமிக்கும் தொகைக்கு நூற்றுக்கு ஐம்பது விகிதம் அதிக லாபம் கிடைக்கும்.

முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

உங்கள் சேமிப்பை யெல்லாம் லாபமும், பத்திரமும் உள்ள

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்குவதில் உபயோகியுங்கள்

இன்றே தொடங்குங்கள்!

பதிவு செய்தல் — ஒரு நல்ல முன்னேற்பாடு.

அஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவுசெய்து கொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணாமற் போனாலுஞ் சரி, அழிந்து விட்டாலுஞ் சரி, தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீஸில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

சேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

காலக்ஷேபம்

தடுத்திருப்பேன்

மாஜிஸ்ட்ரேட் :—அடே, அவர்கள் இரண்டு பேரும் தடிகளைக் கொண்டு அடித்துக் கொண்டார்களாமே! நீ ஏன் அவர்களைத் தடுக்கவில்லை?

சாக்ஷி :—அந்தத் தடிகள் இரண்டும் என்னுடையவை அல்ல. அதனால்தான் சும்மா இருந்து விட்டேன்.

—ஆ. ஏழுமலை.

★

பையன் பங்கு

ஊருக்குப் புதியவர் ஒருவர், பையன் ஒருவனைக் கூப்பிட்டு, "ஏலே! தம்பி! இந்தா இரண்டணா; ஓட்டலுக்குப் போய் இரண்டு லட்டு வாங்கிவா; அதை நீ ஒன்று நான் ஒன்று பங்கு வைத்துக்கொள்ளலாம்" என்றார்.

பையன், இரண்டணாவை வாங்கிக்கொண்டு போய்ச் சிறிது நேரம் கழித்து, "மாமா! கடையில் ஒரே ஒரு லட்டுதான் இருந்தது. நீங்க சொன்னபடி நான் ஒரு லட்டு வாங்கிச் சாப்பிட்டு விட்டேன். இந்தாருங்கள்; மீதி ஒரு அணா" என்று பாக்கியைக் கொடுத்தான்.

—எஸ். வி. துரைசாமி.

★

வேலைக்கு மனு

ஒருவர் (தன் நண்பரிடம்) :—டேய், எனக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லேடா. நான் இதுவரைக்கும் மனுக்களுக்கு ஸ்டாம்பு ஒட்டினது மாத்திரம் 4-14-6 ஆகிறதடா. நான் என்னடா பண்றது?

நண்பர் :—சரி, இன்னொரு ஒண்ணரையணா செலவழிச்சு மனுப் போடடா. 5 ரூபாய் கணக்காக இருக்கட்டும்!

—சி. ஆர். வேதநாதன்.

★

சாதுர்ய நடிகன்

கோவலன் நாடகம் நடந்து கொண்டிருந்தது. மாதவி தனக்கு ஒரு வீடு கட்டித்தரும் படியாகக் கோவலனைக் கேட்கிறாள்.

இந்த இடத்தில், கோவலன் மாதவியினுடைய காதல் (வி) ரஸத்தைச் சகிக்க முடியாத ஜனங்கள் கல்லையும், மண்ணையும் சேகரித்து வீசினர். கல்லடி தன் மேல் படுமோ என்று பயந்த கோவலன் "ஏ! மாதவி! நீ வீடு என்று கேட்டபடியே கல்லும், மண்ணும் வந்து குவிகிறது. நான் போய்க் கண்ணாம்பு வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே திரைக்குள்ளே ஓடிவிட்டான்.

—ராஜாராமன்.

ஈ காக்கை இல்லை!

சுப்பையர் :—நேற்று தெருவிலே ஒரு பெரிய சண்டை. நம்ம வீட்டு எதிரிலே பெருங் கூட்டம் கூடிவிட்டது.

ராமையர் :—அப்புறம் என்ன பண்ணினீர்?

சுப்பையர் :—நல்லகாலமா உங்க வீட்டுப் பெண் நம்ம வீட்டிலே இருந்தாள். எங்க வீட்டு ஆர்மோனியத்தைக் கொடுத்து ஒரு பாட்டுப் பாடச் சொன்னேன்.

ராமையர் :—அப்புறம்?

சுப்பையர் :—ஒரு ஈ, காக்காயாவது அங்கே இருக்கணுமே!

—சி. ஆர். வே.

★

திருப்தியில்லை!

ஒரு பெரியவர் (பிச்சைக்காரனைப் பார்த்து) :—என் அப்பா! சதா சர்வகாலமும் தெருவெல்லாம் சுற்றிப் பிச்சையெடுத்து உண்பதில் உனக்குத் திருப்தியாக யிருக்கிறதா?

பிச்சைக்காரன் :—இல்லை தருமராஜா! ஒரு கார் இருந்தால் நல்லது என்றுதான் தோன்றுகிறது.

—ஆர். வேங்கடராமன்.

★

சரிதான்!

வாங்குபவர் :—என்னப்பா! இது உருத்த கட்டை. எரியாது. வேறு கொடு.

விறகு விற்பவன் :—என்ன சாமி! இது சுத்தக் கட்டை. செல்லாது. வேறே காசு கொடுங்கள்.

—ப. சே. ராஜரத்தினம்.

★

தலைப்பா மாத்தி!

பையன் :—என்னப்பா! யாரோ பெரிய மனிதரைப் பார்க்கப் போவதாகச் சொல்லி விட்டு, இந்த பிய்ந்ததும், கிழிந்ததுமான தலைப் பாகையை வைத்துக் கொண்டு போகிறீரே!

தகப்பன் :—ஆமாம்! அவர் ஒரு பெரிய 'தலைப்பா மாத்தி' என்று கேள்வி. நம் முடைய அதிருஷ்டத்தை இதில்தான் பார்ப் போமே என்று இப்படிப் போகிறேன்.

—பி. ஆர். ஆர்.

★

கணக்கு சரி!

பழக்காரன் :—சாமி! ஒசந்த ஒட்டுமாம் பழங்க. ரெண்டேண்டு அணா சாமி; டஜன் ஒண்ணரை ரூபாய்!



கணக்கு வாத்தியார் (பள்ளிக்கூட ஞாபகத்தில்) :—கணக்கு சரி: சந்தப் போட்டான் இடத்தில் உட்காரு.


—ஆர். அநந்தநாராயணன்.

கூடக் கேட்கிறார்கள். பாவும் கடையி லிருந்து விட்டாய் கடைவரையில் உன்னைக் கொண்டுபோய் இப்போ ழுது கணக்கு எழுதுகிறார்கள்?" என்றது முத்தண்ணா [illegible].

அப்பொழுது "என்னை மறந்து விட்டீர்களா?" என்று இறங்கி வந்தது கேட்டுக். "வாருங்கள் வாருங்கள்!" என்றாள் முத்தண்ணா. கூடவே பேனா, பென்சில், இங்கி பாட்டில், ரப்பர், புஸ்தகம், எல் லாம் அலமாரியிலிருந்து ஒன் றொன்றாய் இறங்கி வந்தன. கூடத் தில் ஒரே கூட்டம். ராஜுவும் கிட்டு வும் கூட்டத்தைப் பார்த்ததும் பயந்துபோய் விட்டார்கள்.

கேட்டுக் பேச ஆரம்பித்தது: "முத் தண்ணா! என்னையும் புஸ்தகத்தை யும் கிழித்து, மறு பொருத்தல் கப்பல் செய்து விடுகிறார்கள். காற்றாடித் தான் நானே காற்றாடியாக வேண்டும். வெய்யிலுக்குக் காவே குடையாக வும் வேண்டும். அப்பப்பா! இந்தப் பையன்களின் தொல்லை பொறுக்கவே முடியவில்லை. உடம்பெல்லாம் கோணல் மாணலாகக் கிழிந்து வீணாய்ப் போய்விட்டது!" என்றது.

"என்னை என்ன பாடுபடுத்துகிறார் கள், தெரியுமா? காய் கறியிலிருந்து கவியன் வரை என் உடம்பில் எழுதி விடுகிறார்கள். என்னைத் துவைக்கிறேன் என்று காரணமில்லாமல் சோப்பைப் போட்டுக் கல்லில் படார் படாரென்று அடிக்கிறார்கள். நான் வீடு கண்ணை அவர்கள் வைய லிருந்து பிழிய் தண்ணீராக வீணாக் கிறார்கள்! இன்னும் நான் கிழிந்து விட்டால் [illegible] கரி, கரி என்று



""என்னடா இந்த நாரை புத் தகக் காகிதத் தூக்கிக் கொண்டு நிற்கிறது?"
"அதுவா? இரவைக் காகே யம் தூக்கிக்கொண்டால் நிற்க முடியாது தெரியுமோ? அதனால் தான்.""

குத்தி நூலால் மூச்சுவிட முடியாமல் இழுத்துப் பிடித்துக் கைத்து விடு கிறார்கள்!" என்றது புஸ்தகப் பை.

உடனே பேனா, பென்சில், ரப்பர், இங்கி எல்லாமாக சேர்ந்து இடத்திற்குப் போய் விடலாம் என்று புறப்பட்டு விட்டன.

அதைப் பார்த்த ராஜுவும் கிட்டு வும் 'ஹோ' வென்று அழ ஆரம்பித்து விட்டார்கள். அம்மா ஓடோடியும் வந்தாள். "நாங்கள் இனிமேல் புஸ்த கம், பேனா, பை இவற்றை யெல் லாம் ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ளுகிறோம். ஒழுங்காய்ப் பள்ளிக் கூடம் போகிறோம்" என்று ராஜு வும் கிட்டுவும் அம்மாவிடம் சொன் னார்கள்.

"பாவம் கொஞ்சம் எழுந் திருங்கள்! இதோ இருக்கிறது பார். புஸ்தகப் பை!" என்றாள் அம்மா. கூடத்தில் எல்லாம் இருந்து கிடந் தன. ராஜுவுக்கும் கிட்டுவுக்கும் வெட்கமாய்ப் போய் விட்டது. புஸ்தகப் பையை எடுத்து ஒழுங்காக வைத்தார்கள்.

அது முதல் அவர்கள் சமர்த்தாய்ப் பள்ளிக்கூடம் போக ஆரம்பித் தார்கள். இப்பொழுது வாத்தியார் "கிட்டு ராஜுவைப்போல் கெட்டிக் காரப் பையன்கள் என் வகுப்பிலேயே கிடையாது!" என்று அவர்கள் அப்பா விடம் சொல்கிறார்.





"ராமு கிட்டு இரண்டு பேருக்கும் விளையாட்டென்றால் ரொம்பப் பிடிக்கும். உபாத்தியாயர் பாடம் நடத்தும் பொழுதுகூட அதைக் கவனிக்காமல் அவர்கள் விளையாடிக் கொண்டிருப்பார்கள். "ராமுவும் கிட்டுவும் படிப்பதே கிடையாது. வகுப்பில் எப்பொழுதும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று வாத்தியார் ஒருநாள் அவர்கள் அப்பாவிடம் சொன்னார்.

அப்பாவுக்குக் கோபம் பிரமாதமாய் வந்துவிட்டது. "அடிக் கழுதைகளா! படிக்காமல் போக்கிரித்தனமா செய்கிறீர்கள்?" என்று பிரம்பால் அவர்களை அடித்து விட்டார்.

ராமுவும் கிட்டுவும் அன்று அழுது கொண்டே பள்ளிக்கூடம் போனார்கள். புஸ்தகத்தையும் ஸ்லேட்டையும் பார்த்தாலே அவர்களுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "உங்களால்தானே நாங்கள் அடிபட்டோம்? இனி மேல் உங்கள் முகத்திலேயே விழிப்பதில்லை!" என்று வழியில் இருந்த பாழுங் கிணற்றில்



"அம்மா! நீ தாலாட்டுப் பாடுவதை நிறுத்தேன்; நான் கொஞ்சம் தூங்கணும்."

புஸ்தகம், ஸ்லேட்டு, நோட்டு, பென்சில், பலப்பம், மை இவைகளை விட்டெறிந்து விட்டு, பந்தை எடுத்துக் கொண்டு பக்கத்திலிருந்த தோப்பிற்கு விளையாட ஓடிவிட்டார்கள். மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து வருவது போல் வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொண்டார்கள்.

அன்றிரவு அவர்களுக்குத் தூக்கமே வரவில்லை.

"ராமு! புஸ்தகம் போச்சேடா!" என்றான் கிட்டு.

"கிட்டு! என் ஸ்லேட்டு போச்சேடா!" என்றான் ராமு.

இந்தச் சமயத்தில், புஸ்தக அலமாரி மெதுவாகத் திறக்கும் சத்தம் கேட்டது. ராமுவும் கிட்டுவும் கூர்ந்து கவனித்தார்கள்.

முத்தண்ணா ஸ்லேட்டார், திடீரென்று குதித்தார். ராமுவும் கிட்டுவும் பயந்து விட்டார்கள்.

"அடே, குட்டி பலப்பம்!" என்று கூப்பிட்டார் முத்தண்ணா ஸ்லேட்டார்.

உடனே குட்டி பலப்பம் உருண்டு ஓடி வந்தது.

முத்தண்ணா ஸ்லேட்டார் குட்டி பலப்பத்தைப் பார்த்து, "இந்தப் பையன்கள் நம்மை அவமானப்படுத்திப் பாழுங் கிணற்றில் தள்ளி விட்டார்கள். இனிமேல் நாம் இவர்கள் முகத்திலேயே விழிக்கக் கூடாது. வா, போவோம்!" என்று அலமாரியை விட்டுக் கீழே குதித்தது.

"முத்தண்ணா! இதற்கா பயப்படுகிறீர்கள்? இந்தப் பையன்கள் போக்கிரிப் பையன்கள். நம்முடைய மதிப்பை அறிந்தவரிடம் போனால் நமது அருமை தெரியும். நம்முடைய பெருமையை அறிந்துதானே இப்பொழுது எலிமெண்டரி ஸ்கூலிலிருந்து ஹைஸ்கூலுக்குக்கூட நம்மை வந்தனோபசாரத்துடன் வரவேற்கிறார்கள்!" என்றது குட்டி பலப்பம்.

"பலே பேஷ்! உன்னுடைய சாரத்தைக் கண்டுதான் நீ கெட்டுப் போனாலும் உன்னை விடாமல் பெரியவர்கள்


வருகிறது!
சின்னப்பா
கண்ணம்பா
கிருஷ்ணன்..
மதுரம்............
சரோஜா.......
மீனலோசனி
JUPITER PICTURES
மஹா
மாயா
S.I.P
ரிலீஸ்
டைரக்ஷன் : T.R. ரகுநாத் & இளங்கோவன் • ஸ்டுடியோ : நியூடோன்

மனைவி மண்ணெண்ணெய்ச் 'சிம்னி'யைக் கையில் பிடித்தவாறு குழந்தையின் அருகில் நின்றாள். அவள் கண்களில் துளித்துக் கொண்டிருந்த நீர்த்திவலைகள் மங்கிய வெளிச்சத்தில் லேசாகத் தெரிந்தது.




குடியானவன் சிறிது தூரத்தில் சித்தப்பிரமை பிடித்தவன்போல் கைகளைக் கட்டிக்கொண்டு நின்றான். டாக்டர் பத்து நிமிஷத்துக்குமேல் குழந்தையைப் பரிசோதித்த பிறகு ஒரு மாத்திரையை இழைத்துக் குழந்தையின் நாவில் தடவினார். சில நிமிஷங்களுக்கெல்லாம் குழந்தையின் தேகத்தில் குப்பென்று வியர்த்துக் கொட்டியது. உடனே குழந்தை கண்விழித்துப் பார்த்தது. டாக்டர் "இனிமேல் ஒன்றும் பயமில்லை. இரண்டு நாளில் குணமாகிவிடும்" என்றார். குடியானவனுடைய மனைவியின் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது.

"கடவுளைப்போல் வந்து......" என்று ஆரம்பித்த வார்த்தைகளை அவனால் முடிக்க இயலவில்லை.

டாக்டர் வாசலுக்கு வந்து காரில் ஏறப் போனார். இதற்குள் அவருக்கு அவனை ஒரு கேள்வி கேட்க வேண்டும் போலிருந்தது. திரும்பி வந்து, "ஆமாம்; ஊரில் எத்தனையோ டாக்டர்களெல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விட்டு இந்தக் கிழத்தை ஏன் அழைத்து வரச் சொன்னாய்?" என்று சங்கோசமின்றிக் கேட்டார்.

"என்ன சொன்னீர்கள்? கிழமா? நீங்கள் இவ்வளவு கிழவராயிருப்பது எங்கள் பாக்கியம்தான் ஐயா! இல்லாவிட்டால் வைத்தியத்தில் உங்களுக்கு இவ்வளவு அனுபவம் கிடைக்குமா? எங்கள் தீராத நோயை யெல்லாம் தீர்த்து வைக்கத் தான் முடியுமா? உங்கள் கை பட்டாலே போதுமே, எந்த நோயும் தீருமே! உங்களை விட்டு விட்டு வேறு யாரை கூப்பிடச் சொல்கிறீர்கள்? நீங்களா இப்படி யெல்லாம் பேசுகிறீர்கள்?" என்று கேட்டாள் அந்தக் குடியானவன் மனைவி. அவள் கண்களில் மறுபடியும் நீர் துளித்தது.

அனந்தராமன் கடிதம் வந்தது முதல் தீராத மனோவியாதியால் தவித்த டாக்டர் வைத்தியம் அவர்களுக்குக் குடியானவன் மனைவியின் வார்த்தைகளே சிறந்த டானிக்காக அமைந்தது.



த்தை அடைந்து விட்டோமோ, வயதானவன் என்ற காரணத்தினால் ஜனங்கள் தம்மை அழைக்காமல் விட்டுவிடுவார்களோ என்றெல்லாம் நினைத்து அடிக்கடி வேதனைப்பட்டார். வயதானவன் என்ற காரணத்தினால் தன் தொழிலுக்கு ஏதேனும் ஊனம் ஏற்படுமோ என்று அவர் பயப்படவில்லை. பிறருக்கு சௌரியம் செய்யும் அரிய பாக்கியம் தமக்குக் கிட்டாமல் போய் விடுமோ என்ற பயம்தான் அவர் உள்ளத்தில் தோன்றித் தீராத வேதனை அளித்துக் கொண்டிருந்தது.

தீராத வியாதிகளை யெல்லாம் தமது மருந்தின் மூலம் குணப்படுத்தி யிருக்கும் டாக்டர் வைத்தியத்துக்குத் தம்முடைய மனோ வியாதியை மட்டும் தீர்க்க முடியாமலிருந்தது. வயதானவர்களே இப்படித்தான்; தனக்கு வயதாகி விட்டது என்று தாங்களே எத்தனை தடவைகள் வேண்டு மானாலும் சொல்லிக் கொள்வார்கள்; ஆனால் பிறர் பார்த்து வயதாகி விட்டதாகச் சொல்வதுதான் அவர்களுக்குக் கட்டோடு பிடிப்பதில்லை.

டாக்டர் வைத்தியம் ஒரு நாள் சுந்தரராமனிடம் 'உடலை உணர்ச்சியற்று மரத்துப் போகச் செய்யும் 'கொகேன்' இஞ்செக்ஷனைப் பற்றி போதனை செய்து கொண்டிருந்தார். அப்போது விளக்கு வைத்து ஒரு மணி நேரம் ஆகியிருக்கும். வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. சுந்தரராமன் தெருக் கதவைத் திறந்து வந்தவனை உள்ளே அனுமதித்தான். அவன் ஒரு வயதான குடியானவன். முகத்திலும் தலையிலும் ஒரே புழுதி படிந்திருந்தது. எலும்பும் தோலுமாய் அவன் பெருமூச்சு வாங்க வந்து நின்ற காட்சியைக் கண்ட டாக்டருக்கு அவன்மீது அவரை யறியாமல் இரக்கம் உண்டாயிற்று.

"நீ யாரப்பா?" என்று இனிமையாக அவனை விசாரித்தார் டாக்டர்.

"பக்கத்து ஊரு; என் குழந்தைக்கு மூன்று நாட்களாய் ஒரே காய்ச்சல். வாய் பிதற்றிக் கொண்டு படுக்கையில் கிடக்கிறான். உடம்பில் அனல் மாதிரி சுடு விசுகிறது" என்று சுருக்கமாகவும் பரபரப்புடனும் விடை கூறினான்.

"பக்கத்து ஊரா? இங்கிருந்து எத்தனை மைல்?" என்று டாக்டர் வைத்தியம் ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஐந்து மைல்."

"ஐயோ, பாவம்! அங்கிருந்து நடந்தா வருகிறாய்?"

"இல்லீங்க."

"பின் எப்படி வந்தாய்?"

"ஓடி வந்தேனுங்க!" என்று கபடமின்றிச் சொன்னான் குடியானவன்.

டாக்டர் "அப்படியா? வடகோடியில் சாமிசத்தில் ஒரு டாக்டர் இருக்கிறாரே? அவரை அழைத்துக்கொண்டு போகிறது தானே? இவ்வளவு தூரம் ஏன் ஓடி வந்தாய்?" என்று கேட்டார்.

"எனக்குத் தெரியாதுங்க; என் பெண்சாதி சொன்னாள். நேராக டாக்டர் வைத்தியம் ஐயா கிட்ட ஓடு; அவர்தான் வரணுமென்று சொன்னாள். நேராக ஓடி வரேன்" என்றான்.

"சுந்தரராமா!" என்று கூப்பிட்டார் வைத்தியம். சுந்தரராமன் தோல் பெட்டியையும், 'ஸ்டெதாஸ் கோப்' பையும் கொண்டு வந்து அவரிடம் நீட்டினான்.

"ஏன் என்னிடம் கொடுக்கிறாய்? நீதான் காரில் போய்க் 'கேஸை'க் கவனித்து விட்டு வா" என்றார்.

டாக்டர் அப்படிச் சொன்னதும் குடியானவனுடைய முக பாவத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. கொஞ்ச நேரம் தயங்கினான். சிறிது நேரம் திகைத்தான். உடம்பை என்னவோ மாதிரி வளைத்துக் கொண்டான்.


டாக்டர், அவனுடைய அபிப்பிராயம் என்ன என்பதை அவனது அங்க சேஷ்டைகளிலிருந்து புரிந்து கொண்டார். "ஏன்? நான்தான் வர வேண்டுமோ?" என்று கேட்டார்.

"ஆமாங்க; பெண்சாதியும் அப்படித்தான் சொல்லியனுப்பினாள்."

டாக்டர் வைத்தியம் காரில் குடியானவனையும் ஏற்றிக்கொண்டு அவன் வீட்டை அடைந்தார்.

★

ஆழ்க்கை பிரக்ஞையற்று மூச்சு விட்டுக் கொண்டிருந்தது. குடியானவன்



"என் ஸார்! இப்படி ஆபீஸ் எல்லோரும் சத்தம் போடுகிறார்களே, அந்த அறையில் இருப்பவர்களுக்கு இடைஞ்சலா யிருக்காதோ?"
"இருக்காது. அவர்கள் எல்லோரும்தான் இந்த அறைக்கு வந்து சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறார்களே!"



டாக்டர் வைத்தியம்

சாவி

★

கடியாரத்தில் மணி ஒன்பது அடிப்பதற்கும் டாக்டர் வைத்தியநாதம் அவர்கள் காரை விட்டு இறங்கித் தமது வீட்டுக்குள் நுழைவதற்கும் முகூர்த்தம் குறித்து வைத்த மாதிரி இருந்தது. வாசல் வராண்டாவில் காத்துக் கிடந்த ஒரு வியாதியஸ்தர் டாக்டரைக் கண்டதும் நமஸ்காரம் செய்தார். வெளியில் வைத்திருந்த 'எனுமல் பேஸி'னில் இருந்த ஜலத்தில் கைகளைச் சுத்தம் செய்து கொண்டே வியாதியஸ்தருடன் பேச்சுக் கொடுத்தார் டாக்டர்.

நோயாளிகளை அக்கறையாகக் கவனித்து, அன்புடன் விசாரித்துத் தகுந்த மருந்தைக் கொடுப்பதில் டாக்டர் வைத்தியம் அவர்களுக்கு இணை அவரே தான். வைத்தியர்களுக்கு இன்றியமையாத சாந்தமும் தயையும் சேர்ந்து அமைந்திருந்த அவரது முகத்தில் புன்சிரிப்பும் காணப்பட்டது. ஊரில் பலபேர்கள் "ஐயோ! எனக்கு ஒரு வியாதியும் வரமாட்டேன் என்கிறதே? குறைந்த பக்ஷம் ஒரு தலைவலியாவது வரக்கூடாதா? டாக்டர் வைத்தியத்திடம் போக மாட்டோமா? அவர் அன்பில் உரைத்துக் கொடுக்கும் மாத்திரைகளைச் சாப்பிட்டு வியாதியைப் போக்கிக் கொள்ள மாட்டோமா?" என்று ஏங்கினார்கள்.

டாக்டர் வைத்தியநாதத்திற்கு அந்த ஊரில் அத்தனை புகழும், செல்வாக்கும் நம்பிக்கையும் இருந்தன.

டாக்டர் கடைசியாக வராண்டாவில் காத்திருந்தவரைப் பரிசோதித்து மருந்து கொடுத்தனுப்பிவிட்டு நேராக அறைக்குள் பிரவேசித்தார். மேஜையின் கண்ணாடிப் பரப்பின் மீது ஐந்தாறு தபால்கள் வைக்கப்பட்டிருந்தன. கவர்களின் விளிம்பைக் கத்தரியால் ஒழுங்காகக் கத்தரித்து எடுத்து அந்தத் துண்டுகளைக் குப்பைக் கூடையில் போட்ட பிறகு, கடிதங்களைப் படிக்கத் தொடங்கினார். கடைசியாக அவர் படித்த கடிதம், அவருக்கு ஆப்த நண்பரும் பாலியத்தில் அவருடன் காலேஜில் படித்தவருமான அனந்தராமன் எழுதியிருந்தார். கடிதம் வருமாறு:

வைத்தியம்,

நான் முன்பே சொல்லியிருந்தபடி என்னுடைய மகன் சுந்தரராமனுடைய வைத்தியப் படிப்பு எல்லாம் முடிந்து விட்டது. அவனை அடுத்த மாதம் தங்களிடம் அனுப்புகிறேன். தங்களுக்கு வைத்தியத்தில் நாற்பத்தைந்து வருஷங்களாக உள்ள அனுபவத்தை அவனுக்குச் சொல்லிக் கொடுத்துத் தங்கள் மகனைப்போல் அவனை விருத்திக்குக் கொண்டு வர வேண்டியது தங்களுடைய கடமையாகும். தங்களுக்கும் வயதாகித் தள்ளாமை வந்துவிட்டிருக்குமாகையால் அவனுடைய உதவியும் தங்களுக்கு உபயோகமாயிருக்கலா மல்லவா?

இப்படிக்கு,

அனந்தராமன்.

டாக்டர் வைத்தியம் அக் கடிதத்தைப் படித்து முடித்ததும் சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்துக் கொண்டார்.

தள்ளாமை வந்து விட்டதா? அப்படி ஒன்றும் தெரியவில்லையே? இப்போது எனக்கு என்ன வயதாகிவிட்டது! இந்த செப்டம்பருக்கு அறுபத்தேழு முடியப் போகிறது. அவ்வளவுதானே? என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார். பிறகு பக்கத்திலிருந்த சீப்பை எடுத்துத் தமது வழுக்கைத் தலையை வாரிவிட்டுக் கொண்டார்.

மறு மாதம் சுந்தரராமன் வந்து சேர்ந்தான். வைத்தியரும் அவனிடம் அத்யந்தப் பிரியம் வைத்துப் பயிற்சி அளித்து வந்தார். சுந்தரராமனும் அவர் சொல்லிக் கொடுத்தவைகளைப் புத்தி நுட்பத்துடன் கிரகித்து வைத்தியத்தில் நல்ல தேர்ச்சி பெற்றான். டாக்டர் வைத்தியம் அவர்களின் மனதை ஒரு விஷயம் மட்டும் எப்போதும் வாட்டிக் கொண்டேயிருந்தது. அனந்தராமன் எழுதியபடி தமக்கு ஒரு வேளை தள்ளாமை வந்து விட்டதோ, வயோதி



"நான் உங்களைப் பார்க்க வாராததற்குக் காரணம் அதுவல்லவே!" என்றேன்.

"அண்ணா! நீங்கள் அவளைக் கல்யாணம் செய்துகொள்ள நினைத்திருந்தீர்களா? சொல்லவே இல்லையே!" என்று கூவினான் சுந்தா.

"அப்படியானால் நான் நேற்று உங்களைப்பார்த்ததும் ஏதற்காக ஒளிந்துகொண்டீர்கள்?" என்றேன் ஆச்சர்யத்தில்.

"சொல்ல வேறு வேண்டுமோ? நீங்கள் சுந்தாவின் சகோதரர் என்று தெரிந்ததும் எவ்வளவு திகைப்பு உண்டாயிருக்கும் என்று உங்களுக்குத் தெரியாதா? இந்த நெருக்கடியான நிலைமையிலிருந்து தப்பிக் கொள்ளத்தான் இங்கே வந்தோம்! எப்பொழுதும் உங்கள் கட்டளையை மீறும் உத்தேசம் எனக்கு இல்லை. இந்தாருங்கள் உங்கள் காமாக்ஷி!" என்று கிழவர் காமாக்ஷியின் கையைப் பற்றினார்.

"மன்னிக்கவேண்டும்; உங்களைப் பற்றி நான் தாறுமாறாய் ஏதோ நினைத்து விட்டேன். இப்பொழுது தான் என் தவறு தெரிந்தது. தவறுகளிலிருந்தே நன்மையும் பிறக்குமல்லவா? இந்தச் சோதனையிலிருந்து எனக்குத் தெளிவும் பிறந்தது. சுந்தா! உன் காமாக்ஷியை ஏற்றுக் கொள்!" என்றேன்.

"அண்ணா! இதுவரை நீ எனக்காகச் செய்த தியாகங்கள் போதாதா? இது வேறு......" என்று சொல்லி என் காலடியில் விழுந்தான் சுந்தா.

அவனை நான் தூக்கி, "சுந்தா! நீங்கள் இப்பொழுது ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதிலிருந்தும் உங்கள் நயன பாஷையிலிருந்தும், உங்கள் மனத்திலிருப்பது எனக்குத் தெரியாதா? நான் உங்கள் சந்தோஷத்தைக் கெடுப்பேனா? ஒருநாளும் இல்லை" என்றேன்.

கிழவரின் உதடுகள் துடித்தன. காமாக்ஷி மூலையில் நின்று ஆனந்த பாஷ்பம் பொழிந்தாள்.

காமாக்ஷிதான்! என் வாழ்வைச் சூன்யமாக்கிச் சென்ற காமாக்ஷி! என்னைப் பைத்தியமாக அடித்த காமாக்ஷி! "வாருங்கள்! வர வேண்டும்..." என்று கூறினாள் என்னைப் பார்த்துத் திகைத்திட்ட அவள் தாத்தா!

நான் நாற்காலியில் இடிந்து போய் உட்கார்ந்தேன். என் தலை சுற்றிற்று. பேச நாவெழவில்லை. சமாளித்துக் கொண்டு எதிரே பார்த்தேன்; காமாக்ஷி அங்கு இல்லை. பிறகு நான் என்ன பேசுகிறேன் என்று தெரியாமல் சிறிது நேரம் ஏதோ பேசி விட்டு வெற்றிலையைக் கையில் எடுத்துக் கொண்டு நான் தட்டுத் தடுமாறிக் கொண்டு வெளியே வந்தேன்.



"எனக்கு விசுவாமித்திரர் வேஷம் என்று நீங்கள் சொன்னதை நம்பி ஆறு மாசமா தாடி வளர்த்துக் கொண்டேன். இப்பொழுது திடீரென்று 'புத்தபிக்ஷு' வேஷம் என்கிறீர்களே, இது நியாயமா?"

வரும்போதெல்லாம் நான் ஏதோ பேசிக் கொண்டிருந்தேனே தவிர, என் உள்ளம் காமாக்ஷியின் மோசடியைப் பற்றி எண்ணிக் கொதித்தது.

"அந்தப் பாதகியை நம்பாதே" என்று இப்பொழுதே சுந்தாவுக்கு எச்சரித்து விடலாமா? வெகு நேரம் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தேன். நான் விஷயத்தைச் சொல்ல வேண்டுமானால் சுந்தாவுக்கு எல்லா விபரங்களையும் கூறியாக வேண்டும். அப்பொழுது நான் பொறாமையால் சொல்வதாக அவன் நினைக்கக்கூடும். எனவே, எதற்கும் பொறுத்திருந்து பார்ப்பதே நலம் என்று நிர்மனித்தேன்.

மறுநாள் சுந்தா என்னிடம் வந்தான்.

"அண்ணா! அந்தப் பெண் என்னை ஏமாற்றிவிட்டாள்!" என்றான்.

"என்ன நடந்தது?"

"அண்ணா! அவளை வீட்டில் காணவில்லை. வீடு பூட்டியிருக்கிறது." எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஏதாவது அவளுக்குப் பணம் கொடுத்திருந்தாயா?"

"ஆம், அண்ணா! அவள் ரொம்ப ஏழ்மை நிலைமையில் இருந்தாள். நான்தான் ஆறு மாதமாக அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன்."

திடீரென்று எனக்கு வைராக்கியம் பிறந்தது. அந்த மோசக்காரியை விடக்கூடாது. எப்படியாவது தேடிக் கண்டு பிடித்துத்தான் ஆகவேண்டும். அவள் வேஷத்தைக் கலைத்தே தீரவேண்டும்—என்று சபதம் செய்துகொண்டேன்.

5

அவள் கடைசியில் எங்களிடம் சிக்காமல் போய் விடவில்லை. பங்களூரில் ஒரு இடத்தில் கடைசியில் அவளைக் கண்டு பிடித்தோம். எங்களைக் கண்டதும் கிழவர் பிரமித்து நின்றுவிட்டார்.

"எதற்காக இப்படி மோசம் செய்து விட்டு ஓடி வந்தீர்கள்? பதில் சொல்லுங்கள்" என்று கேட்டேன் என் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு.

"யார் யாரை மோசம் செய்தார்கள்? பட்டணத்தில் இரண்டு மாத காலம் நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்தோம். வரவில்லை. ஊரில் எல்லோரும் கண்ட கண்ட வதந்தியைக் கிளப்பி விட்டார்கள். காமாக்ஷிக்கும் உங்களுக்கும் ரகசிய உறவு இருப்பதாக ஊரில் சொல்லிக் கொண்டார்கள். குழந்தை அவமானத்தால் வெளியில் தலைகாட்டவே முடியவில்லை. நீங்கள் வருவீர்கள் என்று ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்தோம். கடைசியில் உங்களுக்குக் காமாக்ஷியைக் கல்யாணம் செய்துகொள்ள விருப்பமில்லை என்று நினைத்தோம். ஊர் வம்புக்குப் பயந்து கொண்டு பங்களூருக்கு வந்தோம்" என்றார் கிழவர்.

நான் பொறி கலங்கி நின்றேன். என் வாழ்வில் செய்த மகத்தான தவறை நினைத்து மனம் வெதும்பினேன்.



ஸ்த்ரீயின் பெருமையான தொழில்!

காயமடைந்த வீரர்களுக்கும் நோயாளிகளுக்கும் சிகிச்சை செய்வதைக் காட்டிலும் இந்த யுத்த காலத்தில் உயர்ந்த வேலை வேறு என்ன இருக்கிறது? இந்த சிறந்த வீரர்கள் தேர்ச்சி பெற்றவர்களின் ஒத்தாசையையே நம்பியிருக்கிறார்கள். தேர்ச்சியடைந்த நர்ஸ்கள் இல்லாமல் நமது டாக்டர்களும் அவர்களது வைத்தியமும்—அவர்களிடமுள்ள நோயாளிகளைப் போலவே—பயனற்றுப் போய் விடுவார்கள். தற்காலம் யுத்தத்தின் போக்கு வெகு தீவிரமாகவேயிருக்கிறது. அத்தியாவசியமான இந்த வேலைக்கு மேன் மேலும் ஸ்த்ரீகள் தேவையாயிருக்கின்றனர்-தாமதம் செய்யாதீர்கள்! உறுதியாக வெற்றியைக் கொண்டுவரும் வீரர்களுக்குச் சிகிச்சை செய்ய முன் வாருங்கள்.

முன் அனுபவம் அவசியமில்லை. வேலையில் சேருமுன் சிறு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏற்கனவே நர்ஸ் வேலையில் தேர்ந்தவர்கள் நேரடியாக சேர்ந்து விடலாம். அனுபவமுள்ளவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கப்படும்.

திருப்திகரமான சேவையின் முடிவில் சன்மானம் வழங்கப்படும். யோக்யதா பத்திரம் பெற்ற நர்ஸ்கள் ஐ. எம். என். எஸ். நிபந்தனைகளுக்குச் சம்மதமில்லாவிடில் விசேஷ நிபந்தனைபடி ஏ. என். எஸ்.-ல் சேரலாம். மற்ற விவரங்களுக்கு உங்கள் டிவிஷனிலுள்ள லேடி சூப்பரின்டென்டென்ட், ஸெயின்ட் ஜான் அம்புலன்ஸ் ப்ரிகேட், ஓவர்ஸீஸ்"க்கு எழுதவும். இந்த விலாஸத்தை அறிந்துகொள்ள முடியாமல் போனால் டைரக்டர் ஜெனரல், இந்தியன் மெடிகல் சர்வீஸ், நியூ டெல்லி என்ற விலாஸத்திற்கு எழுதுங்கள்.

ஏ. என். எஸ்.

(ஆக்ஸிலரி நர்ஸிங் சர்வீஸ்)

இதில் சேர்ந்து இந்தியாவுக்குச் சேவை செய்யுங்கள்.

AAA. 992

இரண்டு மாதம் சென்றது. என் சகோதரன் மேற் படிப்புக்காக பங்களூருக்குப் போனான். இத்தனை நாளாய்க் காமாக்ஷியைக் காணாத நான் அவளைப் போய்ப் பார்ப்பதற்காக ஒருநாள் அவள் வீட்டுக்குக் கிளம்பினேன். என்ன ஆச்சரியம்! அவள் வீடு பூட்டப் பட்டிருந்தது! அவள் எங்கே போய்விட்டாள்! அக்கம் பக்கத்தில் புலன் விசாரித்தேன்! ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

என் மனம் குழம்பிற்று. என் நிலை தடுமாறிற்று. என் மனத்தில் மாளாத ஆசையைத் தூண்டிவிட்டுக் காமாக்ஷி எங்கே மறைந்து போனாள்? என் முகத்தில் விழிக்கவேண்டாம் என்று போய்விட்டாளா, அல்லது அவளுக்குத்தான் ஏதாவது ஆபத்து நேர்ந்து விட்டதா? அவளை எங்கெல்லாமோ தேடச் சொன்னேன்.. பிரயோசனம் இல்லை!

வாழ்வு எனக்குக் கசந்து விட்டது. வக்கீல் தொழிலையும் நான் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிட்டேன். என் துயரத்தை வெளியில் சொல்லவும் வெட்கப்பட்டேன். அப்பொழுதெல்லாம் என்னைப் பைத்தியம் பிடிக்காமல் செய்தது என் சகோதரன் கடிதங்கள் தான். அவன் எழுதிய வாத்ஸல்யம் ததும்பும் கடிதங்கள் என்னைப் பரவசப்படுத்தி உயிர் வாழச் செய்தன.



திடீரென்று ஒரு நினைவு வந்து எனக்குத் தாங்க முடியாத வேதனையைக் கொடுத்தது! காமாக்ஷி என்னை ஏமாற்றிவிட்டுப் போயிருப்பாளோ என்ற நினைவுதான் அது. அப்படியா அந்தப் பெண் மோசம் செய்திருப்பாள்? ஆயிரம் ரூபாய் வேறு அவளுக்குக் கொடுத்தேனே, என்ன மதியீனம்! — இவ்விதம் எல்லாம் எண்ணி நான் மனம் புழுங்கினேன்.

ஒருநாள் என் சகோதரனிடமிருந்து எதிர்பாராத ஒரு கடிதம் வந்தது. என் கடிதங்களில் துயரம் தொனிப்பதாகவும் அதற்குக் காரணம் அவனுக்குத் தெரியும் என்றும் எழுதியிருந்தான். என் பிரம்மச்சரிய வாழ்வே எனக்கு அலுப்பைக் கொடுத்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லையாம். கூடிய சீக்கிரத்தில் நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக, நான் பிரம்மச்சாரியாக இருப்பதால் எவ்வளவோ அசௌகர்யங்கள் இருப்பதாக மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தான்.

நான் அவனுக்குக் கடிதம் எழுதினேன்: "நான் பிரம்மச்சாரியாகவே இருக்கப்போகிறேன். நீ பேஷாகக் கல்யாணம் செய்து கொள்ளலாம். நீ யாரையாவது மனத்தில் வைத்திருந்தால் எனக்கு எழுது! நானே வந்து உன் கல்யாணத்தை முடித்து வைக்கிறேன்" என்று எழுதினேன்.

கடைசியில் நான் எதிர்பார்த்தபடியே அவன் ஒரு ஜாதகத்தை அனுப்பினான். அது அவனுக்கு மிகவும் பொருத்தமாயிருந்தது. நானே வந்து மற்ற விஷயங்களைப் பேசவேண்டும் என்று எழுதியிருந்தபடியால் நான் பெண்ணைப் பார்க்கப் பங்களூருக்குப் போனேன்.

4

மறுநாள் காலை என்னைச் சந்த்ரா ஒரு பெரிய மாடி வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனான். நாங்கள் உள்ளே சென்றதும் எதிரே ஒரு பெண் வந்து நின்றாள். அவள் வேறு யாரும் இல்லை;

ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் அவனிடம் நான் தெரிவிக்கவில்லை. அவள் குறிப்பிட்ட கடன்காரனிடம் ஒரு காலணா கூடக் கிடையாதென்பதையும் அவனிடம் தப்பிடிகூட நான் வாங்கவில்லையென்பதையும் நான் சொல்லவேயில்லை!

காமாக்ஷியைப் பார்த்ததிலிருந்து என் மனம் சிந்தனைச் சுழலில் அகப்பட்டுத் தவித்தது. இதுவரை என் கல்யாணத்தைப் பற்றி நினைக்காத நான் அதைப்பற்றித் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தேன்.

இதற்குப் பிறகு, காமாக்ஷியை நான் அடிக்கடி சந்திப்பது வழக்கமாயிருந்தது. ஆனால் என் எண்ணத்தை எப்படி வெளியிடுவது? அவள் அந்தரங்க எண்ணம் எப்படியிருக்குமோ?— என்று எண்ணித் தயங்கினேன். ஒருநாள் தாத்தாவிடம் மெதுவாக என் மனோபீஷ்டத்தை வெளியிட்டேன்.

கிழவர் பெரிதும் வியப்புக்குள்ளானவர் போல் தோன்றினார். நான் அத்தகைய எண்ணம் கொண்டிருக்கிறேன் என்பதை அவர் கொஞ்சமும் அதுவரை நினைக்கவில்லை என்றே தோன்றியது. "என் கவலை விட்டது. காமாக்ஷி அதிர்ஷ்டசாலிதான்" என்று அகமகிழ்ந்து கூறினார். "காமாக்ஷியை நன்றாக விசாரித்துவிட்டுச் சொல்லுங்கள்! அவள் இஷ்டம் எப்படியிருக்கிறதோ?" என்றேன்.

இந்த சம்பவம் நடந்த பிறகு, காமாக்ஷி என் எதிரே வருவதில்லை. என்ன ஆச்சரியம்! முன்பெல்லாம் எதிரில் வந்து தங்கு தடங்கலில்லாமல் பேசிய காமாக்ஷி இப்போது என்னோடு பேசுவதில்லை. வந்தாலும் முகத்தைத் திருப்பிக்கொண்டு போகிறாள். சலனமற்றிருந்த அவள் முகத்தில் இப்பொழுது மாறுதல் காணப்பட்டது. பொல்லாத சங்கோஜம் அவளுக்கு வந்து விட்டது!

அவள் உண்மையில் என்னை நேசித்தாளா, அவள் என்னிடம் கொண்டிருந்தது நன்றியும் மதிப்புந்தானா?—இதைத்தான் நான் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருநாள் கிழவர் கல்யாண விஷயமாகப் பேசினார். அந்தச் சித்திரையில் முகூர்த்தத்தை வைத்துக் கொள்ளலாமென்று தெரிவித்தார்.

3

இந்தச் சமயத்தில்தான் என் சகோதரன் கந்தா படிப்பை முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பி வந்தான். வந்ததுமே என்னிடம் மாறுதலைக் கவனித்து விட்டான்.

"அண்ணா! ஏன் ஏதோ மாதிரி இருக்கிறாய்?" என்று என்னைக் கேட்டான்.



"ஒன்றுமில்லையே" என்றேன்.

"தெரியும் அண்ணா தெரியும். சொல்லக் கூடாதென்றுதானே ஒளிக்கிறாய்?" என்றான்.

அவன் என்னைக் கவனிக்க ஆரம்பித்ததிலிருந்து, நான் காமாக்ஷியின் வீட்டுக்குப் போவதை நிறுத்தி விட்டேன். சமயம் வருகிறபோது அவனிடம் கல்யாணத்தைப்பற்றி வெளியிடலாம் என்பதுதான் என் எண்ணம்.

சோதனை

வஸந்தன்

காலேஜ் படிப்பு, பயிற்சி எல்லாம் முடிந்த பிறகு என் வக்கீல் தொழிலை ஆரம்பித்த புதிதில் இந்தச் சம்பவம் நடந்தது. வீட்டுக்கு நான்தான் பெரியவன். தாய் தந்தையரின் புத்திர வாஞ்சை எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாது. சிறு வயதிலேயே அவர்கள் மறைந்து விட்டார்கள். ஆகவே சகோதர வாஞ்சையில் என் ஏக்கங்களை மறந்துவிட எண்ணினேன். என் இளைய சகோதரன் சுந்தாவுக்கும் எனக்கும் கொஞ்சம்கூட வித்தியாசம் தெரியாது. எங்களைப் பார்த்தவர்கள் இருவரும் இரட்டைக் குழந்தைகள் என்றே சொல்வார்கள்.

"காசி சர்வகலாசாலையில் படிக்கப் போக வேண்டும்!" என்று அவன் சொன்ன போது, "நீயும் இப்பொழுது என்னைப் பிரிகிறாயா? இங்கே படிக்கக் கூடாதா?" என்றேன். ஆனால் அவன் பிடிவாதமாயிருந்ததால் விடை கொடுத்தனுப்பினேன். நான் பிராக்டிஸை ஆரம்பித்த புதிதிலும் எல்லா விதத்திலும் தனிதான் என்ற நினைவு உண்டாயிற்று.

ஆனால், அதிருஷ்டம் எனக்குத் துணையாயிருக்கிறது என்பதை நான் விரைவில் தெரிந்துகொண்டேன். அவ்வளவு சீக்கிரத்தில் தொழிலில் நல்ல பெயர் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

2

ஒரு நாள் காலையில் என் ஆபீஸ் அறையில் தினசரிப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தபோது, உள்ளே வேலைக்காரப் பையன் ஓடி வந்து, "யாரோ அம்மான் உங்களைப் பார்க்க வேண்டுமாம்" என்றான். "உள்ளே வரச்சொல்" என்றேன்.

உள்ளே ஒரு கிழவர் வந்தார். அவருக்குப் பின்னால் ஒரு பெண் வந்தாள். அவள்தான் காமாக்ஷி!

அவளுக்குப் பதினெட்டு வயதிருக்கும். மஞ்சள் கரை போட்ட பட்டுப் புடவை உடுத்தியிருந்தாள். மெல்லிய அவள் தேகம் காற்றிலசைந்தாடும் பூங்கொடி போல் இருந்தது. அவள் முகத்தில் தோன்றிய துக்கத்தையும் மீறி அவள் அழகு பிரகாசித்தது.

"இவள்தான் என் பேத்தி" என்றார் தாத்தா.

அந்தப் பெண் சற்றுத் தயங்கினாள். பிறகு, பரபரப்பை அடக்கிக் கொண்டு, "ஒரு முக்கியமான காரியமாகத் தங்களைப் பார்க்க வந்தோம். உங்களைத் தவிர வேறு யாரும் உதவி செய்வதற்கில்லை" என்றாள்.

"ஏதாவது கேஸ் விஷயமாகவா?" என்றேன்.

"ஆமாம். என் தகப்பனார் இரண்டு வருஷங்களுக்கு முன் காலமாகிவிட்டார். அதற்குப் பிறகுதான் தாங்கமுடியாத கஷ்டம் வந்துவிட்டது. அவருக்குப் பணம் கொடுக்க வேண்டியவர்கள் ஏமாற்றி விட்டார்கள். பணம் கொடுத்திருந்தவர்கள் வழக்குப் போட்டு விட்டார்கள். ஆகவே, கையிலிருந்ததை விற்று அவர்களுக்குக் கொடுத்தாகிவிட்டது. இப்பொழுது திக்கற்ற நிலைமையில் இருக்கிறோம். ஒரு இடத்திலிருந்து ஆயிரம் ரூபாய் எங்களுக்கு வரவேண்டும். எவ்வளவோ தடவை கேட்டும் பணம் வரவில்லை. அதை எப்படியாவது நீங்கள் வழக்குப் போட்டு வாங்கிக் கொடுத்து விட்டால், அதைக் கொண்டு என் படிப்பை முடித்துக் கொள்ள உதவியாயிருக்கும். அதற்குப் பிறகு நான் எப்படியாவது பிழைத்துப் போவேன்" என்றாள் அந்தப் பெண்.

"நிச்சயமாக உங்களுக்குப் பணம் கிடைக்கும்படி வழி செய்கிறேன்" என்று சொல்லி, கடன்காரரின் விலாசத்தைக் குறித்து வைத்துக் கொண்டேன்.

"இன்னும் ஒரு வாரம் கழித்து வாருங்கள்" என்று சொல்லி அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினேன்.

மறு வாரம் காமாக்ஷி என்னைப் பார்க்க வந்தபோது, "பணத்தை வாங்கப்பட்டபாடு போதும் போதுமென்றாகி விட்டது. காரியம் ஜயம்தான்!" என்று சொல்லி ஆயிரம் ரூபாயை அவளிடம் கொடுத்தேன். "உங்கள் உதவிக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்?" என்றாள். "இதையாவது கடன் கொடுக்காமல் வைத்துக் கொண்டு மேலே வாசிப்பது ஒன்றே எனக்குச் செய்யக்கூடிய பிரதியுபகாரம்" என்றேன்.

ஆனந்தமாக லிப்டன் தேனீர் அருந்தும்போது பொறுப்பற்ற பேச்சுகளைப் பேசாதீர்கள்.


யுத்த டீ
கடினமான காலங்களில்
இந்தியன் டீ அருந்துங்கள்.
IK 222


வேறு என்ன கேள்வி? பொருள்களை யெல்லாம் இழந்தபின் இவர்கள் மேலுள்ள வஸ்திரங்களும் இப்போது சகுனியுடையதே. பாண்டவர்களுடைய வஸ்திரங்களையும் அவர்களுடைய மனைவியான இவளுடைய துணியையும் பறித்து உடனே சகுனிக்குத் தருவாய் துச்சாதனா!" என்றான்.

பாண்டவர்கள், கர்ணன் சொன்னதைக் கேட்டதும், "தருமத்தின் பரீட்சை கடைசிவரையில் நடைபெற வேண்டியதுபோலிருக்கிறது. எதற்கும் தயார்" என்று பேச்சின்றி உடனே தங்கள் அங்க வஸ்திரங்களை எடுத்துச் சபையில் வீசி எறிந்தார்கள்.

இதைக் கண்ட துச்சாசனன் திரௌபதியிடம் சென்று, அவள் ஆடையையும் பிடித்திழுக்க ஆரம்பித்தான். இனி பகவான் ஒருவனே துணை என்று பாஞ்சாலி, "லோகநாதா! ஈசனே! இந்த நிலையை அடைந்த என்னை நீயும் கைவிட்டு விடாதே! உன்னைச் சரணமடைகிறேன். காப்பாற்று!" என்று அச்சுதன் பேரைச் சொல்லிப் பெரும் கூச்சல் போட்டுவிட்டு மூர்ச்சை போனாள்.

அப்போது ஒரு பெரிய ஆச்சரியம் நடந்தது. துச்சாதனன் இழுக்க இழுக்க, திரௌபதியின் வஸ்திரங்கள் புதிது புதிதாக உண்டாகிக்கொண்டு வந்தன. பெருங் குவியலாகத் திவ்விய ஆடைகள் சபையில் குவிந்தன. துச்சாதனன் களைத்துப் போய்த் தரையில் உட்கார்ந்தான். பயந்து நடுங்கின சபையில் கலகல வென்று சத்தம் உண்டாயிற்று. இந்தச் சமயத்தில் கோபத்தினால் உதடுகள் துடிக்கப் பீமன் எழுந்து பேரொலியுடன் பயங்கரமான ஒரு பிரதிக்ஞை செய்தான்.

"பரதவம்சத்திற்குத் தகாத இந்தப் பாவி துச்சாதனன் மார்பைப் பிளந்து இவன் ரத்தத்தை நான் உறிஞ்சிக் குடித்துவிட்டுத்தான் என் முன்னோர்கள் இருக்கும் உலகத்திற்குப் போவேன்! இது சத்தியம்!" என்று பீமசேனன் செய்த கோர சபதத்தைக் கேட்டுச் சபையோர் அனைவரும் நடுங்கினார்கள். அப்போது திடீரென்று நரிகள் ஊளையிட்டன. நாலா பக்கங்களிலிருந்து கழுதைகளும் பிணம் தின்னும் பறவைகளும் விகாரமாகக் கத்தின.



நடந்த சம்பவம் குலநாசத்துக்குக் காரணமாகும், தீராத துவேஷம் உண்டாகி விட்டது, தன் புத்திரர்களுக்குப் பெரிய அபாயம் நேர்ந்து விட்டது என்பதை அறிந்து கொண்ட திருதராஷ்டிரன் திரௌபதியை அழைத்து, "பாஞ்சாலி, என் பிரிய மருமகளே! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று சொல்லித் தன் புத்திரர்கள் மேல் கோபமும் வெறுப்பும் கொண்டு திரௌபதியைச் சமாதானப் படுத்தப் பார்த்தான். யுதிஷ்டிரனைக் கூப்பிட்டு, "அஜாத சத்ருவே! நீ க்ஷேமமாக இருப்பாய். துரியோதனன் செய்த தீமையை மனதில் வைக்க வேண்டாம். உன் தாயான காந்தாரியையும் கண்ணில்லாத என்னையும் மதித்து மற்றவர்கள் செய்த குற்றங்களைப் பொறுப்பாய். நாடு நகரம் பொருள் எல்லாவற்றையும் மறுபடி பெற்றுச் சுதந்திரமாக இருங்கள். இந்திரப் பிரஸ்தம் போங்கள்" என்றான்.

* * *

இவ்வாறு திருதராஷ்டிரனிடம் வரம் பெற்றாலும் யுதிஷ்டிரனுக்கும் சகோதரர்களுக்கும் மனதில் சமாதானம் உண்டாகவில்லை. ஆட்டத்தில் இழந்ததைத் திரும்பப் பெறுவதில் ஏதோ குற்றம் இருப்பதாகவே எண்ணினார்கள். கஷ்டங்களும் அனர்த்தங்களும் நெருங்கும் காலத்தில் புத்தி தடுமாறுவது இயல்பு. பூபாரம் தொலைவதற்காகக் கலியினால் பிரவேசிக்கப் பட்டவனாய்ச் சபையோர் எல்லாரும் தடுத்தும், தருமபுத்திரன் மறுபடியும் சகுனியுடன் ஆட்டத்திற்கு உட்கார்ந்து தோல்வியடைந்து புது நிபந்தனைக்கு ஆளானான். தோற்றவன் தன் சகோதரர்களுடன் பன்னிரண்டு வருஷம் வனவாசம் செய்து பின் மூன்றாம் வருஷம் பிறரால் அறியப்படாமல் அஞ்ஞாதவாசம் செய்வது; அறியப்பட்டால் திரும்பவும் பன்னிரண்டு வருஷம் வனவாசம் செய்வது என்கிற நிபந்தனைப்படி மறுபடியும் பாச்சிகை உருட்டி யுதிஷ்டிரன் தோல்வி யடைந்தான்.

உடனே பாண்டவர்கள் வனவாச தீட்சை எடுத்துக்கொண்டு சபையோரிடம் விடைபெற்றுக் காடு சென்றார்கள். சபையிலிருந்த அனைவரும் வெட்கத்தினால் தலை குனிந்தார்கள்.

சபையைச் சேர்ந்ததும் திரௌபதி தன் கோபத்தை அடக்கிக்கொண்டு கூடி யிருந்த விருத்தர்களைப் பார்த்து, கம்பீர மாகப் பேச ஆரம்பித்தாள்: "சூதில் கை தேர்ந்தவர்களும் அயோக்கியர் களும் மோசமாகச் சூழ்ச்சி செய்து அரசனை ஏமாற்றி என்னைப் பந்தயமாக வைக்கச் செய்தது எவ்வாறு நியாய மாகும்? சுதந்திரம் இழந்த ஒருவன் எப்படித் தன் மனைவியைப் பந்தயம் வைத்து இழக்க முடியும்? மனைவிகள், பெண்கள், மருமகளிர் படைத்த கௌரவ குலத்தோர் பலர் சபையில் இருக்கிறீர்கள். என் கேள்விக்குச் சமாதானம் சொல்லுங்கள்" என்றாள்.

இவ்வாறு பாஞ்சாலி ஒரு அநாதைப் பெண் போல் சங்கடப்படுவதைப் பார்த்துக்கொண்டிருந்த பீமனுக்குப் பொறுக்க முடியவில்லை. "யுதிஷ்டி ரரே! சூதாட்டமே தொழிலாக வைத் திருக்கும் நீசரும் தங்களோடு வாழும் தாசிகளைக்கூடப் பந்தயம் வைக்க மாட் டார்கள். துருபத புத்திரியை நீர் இந்த அற்பர்கள் துன்பப்படுத்த விட்டீர். இந்த அக்கிரமத்தை நான் பொறுக்க முடியாது. இந்த மகா பாவத்திற்கு நீர் காரணமாவீர். ஹே! தம்பி சகதேவா! நெருப்பு எடுத்து வா. எந்தக் கைகளைக் கொண்டு இந்தச் சூதாட்டம் இவர் ஆடி னாரோ, அந்தக் கைகளை நான் நெருப்பு வைத்துக் கொளுத்தப் போகிறேன்" என்று கர்ஜித்தான். அருச்சுனன் பீம னைத் தடுத்தான். "அப்பனே! இதற்கு முன் எப்போதும் நீ இவ்வாறு பேசினது கிடையாது. நம்முடைய சத்ருக்களால் செய்யப்பட்ட இந்தச் சூழ்ச்சி நம்மைக் கூடத் தருமத்திலிருந்து நழுவிப் பாவம் செய்யவும் தூண்டுகிறது. நாம் அந்த வலையில் விழக்கூடாது. பகைவர்களின் எண்ணம் நிறைவேறிப் போகும், ஜாக் கிரதை!" என்றான்.

அருச்சுனன் சொல் பீமனைத் தடுத் தது. கோபத்தை அடக்கிக்கொண்டான்.

பாஞ்சாலியின் பரிதாபத்தைப் பார்த்த திருதராஷ்டிர புத்திரனான விகர்ணன் எழுந்தான். "க்ஷத்திரிய வீரர் களே! நீங்கள் என்ன காரணத்தினால் பேசாமலிருக்கிறீர்கள்? நான் சிறியவன் ஆனாலும் நீங்கள் மௌனம் சாதிப்பதால் என் அபிப்பிராயத்தைச் சொல்லு கிறேன், கேளுங்கள். மோசமாக அழைக் கப்பட்டுச் சூதாட்டத்தில் சிக்கி விட்ட யுதிஷ்டிரன் இவளைப் பந்தயம் வைத் தான். அது செல்லாது. தவிர, இவள் யுதிஷ்டிரன் ஒருவனுக்கு மட்டும் சொந்த மல்ல. அதனாலும் பந்தயம் செல்லாது. மேலும் தன் சுதந்திரத்தைத்தான் முதலில் இழந்துவிட்டான். தன்னைத் தான் தோற்றபின் இவளை வைத்து ஆட அவனுக்கு உரிமை ஏது? மற்றும் ஒரு ஆட்சேபனை உண்டு. சகுனியே முதலில் இவள் பெயரைச் சொன் னான். இது க்ஷத்திரியர்கள் ஆடும் முறைக்கு முரண்பட்டது. குறிப்பிட்ட பொருளைப் பந்தயம் வைக்கச்சொல்லி எதிராளி சொல்லக்கூடாது. இவற்றை யெல்லாம் யோசித்தால் பாஞ்சாலி நியா யமாக ஜயிக்கப்படவில்லை. இது என் அபிப்பிராயம்" என்று சொன்னான்.

இவ்வாறு சிறுவனாகிய விகர்ணன் தைரியமாகப் பேசினதும் சபையோ ருக்குக் கடவுள் கொடுத்த அறிவு திடீரென்று சிறையினின்று விடுபட்டது போல் பெரிய ஆரவாரம் கிளம்பிற்று! அனைவரும் ஒரே முகமாய் விகர்ணனைப் புகழ்ந்தார்கள். "தருமம் பிழைத்தது! தருமம் பிழைத்தது!" என்றார்கள்.

அந்த சமயத்தில், கர்ணன் எழுந்து,

"விகர்ணா! சபையில் பெரியவர்கள் இருக்கச் சிறு பையனான நீ எழுந்து யுக்தி வாதம் செய்கிறாய். நெருப்பைக் கடைந்த அரணிக் கட்டையை அந்த நெருப்பே பற்றி அழிப்பதுபோல் நீ அறியாமையால் அவசரப்பட்டு, பிறந்த வீட்டுக்கே துரோகம் செய்கிறாய். தனக்குள்ள எல்லாப் பொருளையும் யுதிஷ்டிரன் முதலிலேயே பந்தயம் வைத்து இழந்தான். ஆகையால் இவளை முந்தியே சகு னிக்கு இழந்து விட்டான். இதைப் பற்றி



வியாசர் விருந்து



துரௌபதியின் துயரம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

தன் எஜமானன் கட்டளையை நிறைவேற்றப் பிரதிகாமி திரௌபதியிடம் சென்றான்.

"அம்மணி, துருபத புத்திரியே! யுதிஷ்டிரர் சூதாட்டம் என்னும் போதையில் விழுந்து உன்னைத் துரியோதனனுக்கு இழந்து விட்டார். திருதராஷ்டிரன் வீட்டில் வேலை செய்வதற்காக உன்னை அழைத்துப் போக அவர்கள் கட்டளைப்படி வந்திருக்கிறேன்" என்றான்.

திகைத்துப் போன திரௌபதி, "பிரதிகாமி, என்ன சொல் சொன்னாய்? எந்த ராஜபுத்திரன் தன் மனைவியை ஆட்டத்தில் பந்தயம் வைப்பான்? பந்தயம் வைக்க வேறு ஒரு பொருளும் இல்லையா?" என்றாள்.

"ஆமாம், தாயே! வேறு பொருள் இல்லாதபடியால்தான் உன்னை வைத்து ஆடினார்" என்று, யுதிஷ்டிரன் பொருளெல்லாம் இழந்ததும், தம்பிகளை இழந்ததும், பிறகு தன்னையும் மனைவியையும் பந்தயமாக வைத்ததும், நடந்த விருத்தாந்தம் முழுதும் சொன்னான்.

திரௌபதி கோபாவேசம் அடைந்தாள். "ஓ, தேரோட்டியே! திரும்பிப் போ. போய்ச் சூதாடினவரைக் கேள். நீர் முதலில் உம்மைத் தோற்றீரா, அல்லது மனைவியைத் தோற்றீரா என்று கேள். சபையோர் முன்னிலையில் இந்தக் கேள்வி கேட்டு விடை பெற்றுக் கொண்டு பிறகு என்னை அழைத்துப் போகலாம்" என்றாள்.

பிரதிகாமி அவ்வாறே போய்ச் சபையில் முன் தர்மபுத்திரனைப் பார்த்து திரௌபதி சொன்னபடி கேட்டான். யுதிஷ்டிரர் உயிரிழந்த பிணம்போல் மறுமொழி சொல்லாமல் நின்றார்.

அதன்மேல் துரியோதனன் பிரதிகாமியைப் பார்த்து, "பாஞ்சாலி இவ்விடம் வந்து தானே புருஷனை இந்தக் கேள்வி கேட்கட்டும். போய்த் திரௌபதியை அழைத்து வா!" என்றான்.

பிரதிகாமி மறுபடியும் திரௌபதியிடம் சென்று, "அரச குமாரியே! அற்பனான துரியோதனன் உன்னைச் சபைக்கு வரச் சொல்லுகிறான். நீயே நேரில் வந்து கேள்வி கேட்கலாம் என்று கட்டளை விடுகிறான்" என்று வணக்கத்துடன் சொன்னான்.

திரௌபதி மறுபடியும், "இல்லை, நீ திரும்பப் போய்ச் சபையோரையே நான் கேட்ட கேள்வியைக் கேள். என் பிரச்னைக்கு அவர்களாவது பதில் சொல்லட்டும்" என்றாள்.

பிரதிகாமி சபைக்குப் போய்த் திரௌபதி சொன்னதைச் சபையோருக்குத் தெரியப்படுத்தினான்.

துரியோதனன் கோபம் கொண்டு தம்பி துச்சாதனனைப் பார்த்து, "இந்தத் தேரோட்டி மடையன் பீமனைக் கண்டு பயப்படுகிறான். நீ போய் அவளை இழுத்து வா!" என்று உத்தரவிட்டான்.

துச்சாதனனும் துரிதமாகவே சென்றான். திரௌபதி இருக்குமிடம் சென்று, "வா, வா! வீணில் தாமதம் செய்ய வேண்டாம்! நீ ஜயிக்கப்பட்டாய். வெட்கம் ஏன்? அழகியே! கௌரவர்களைச் சேர். தருமமாக அடையப் பட்டிருக்கிறாய். சபைக்கு வா!" என்று வெட்கமற்று, துச்சாதனன் சொன்னான். சொன்னதோடு அவளைப் பிடித்து இழுக்கப் போனான்.

பாஞ்சாலி எழுந்து துயரம் தாங்க முடியாமல் கதறிக்கொண்டு திருதராஷ்டிரனுடைய அந்தப்புரத்திற்குள் ஓடினாள். துச்சாதனன் அவளைத் துரத்திக் கொண்டு போய் அவள் தலைமயிரைப் பிடித்திழுத்து அலங்கோலம் செய்து சபைக்கு அவளைப் பலாத்காரமாக இழுத்துக் கொண்டு வந்தான்.



காந்தி மலர் 2.

'பெண்களுக்கு'

பெண்கள் சம்பந்தமாகவும், அவர்கள் செய்யவேண்டிய சேவை, கடமை ஆகியவை பற்றியும் அவர்களுக்குரிய உரிமை, மேன்மை ஆகியவை பற்றியும் காந்திஜி இந்தப் புத்தகத்தில் நன்கு விளக்கி இருக்கிறார். 'மாணவருக்கு' என்ற புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்த வெ. ராமசாமி, அ. லெ. நடராஜன் ஆகிய இருவருமே இந்தப் புத்தகத்தையும் மொழி பெயர்த்து இருக்கிறார்கள்.

கரப் பைண்டு—அழகிய பதிப்பு
காந்திஜியின் படமும் சேர்ந்தது

விலை ரூ. 6/-

புதுமைப் பதிப்பகம்

பூரண விற்பனை உரிமையாளர்

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி



குழந்தையின்

ஆரோக்கியம்

தாயைப் பொருத்துள்ளது! . . .

ஏனெனில் சிசு குழந்தைக்கு வலுவையும் சீரான வளர்ச்சியையும் அளிக்கும்படி ஆகாரம் கொடுத்துப் போஷிப்பது தாயின் முக்கிய கடமை. ஆகவே முதலாவதாக தாயாரின் தேகாரோக்கியத்திற்கு **சாந்தி அசோகா** ஆதாரமளிக்கட்டும். அது ஒரு சிறந்த புஷ்டியுள்ள டானிக். மேலும் அதில் ஸ்திரீகளின் சக்தியையும் தேகாரோக்யத்தையும் குலைக்கக்கூடிய சகலவிதமான வியாதிகளையும் அகற்ற அகற்றும் அசோகா என்னும் விசேஷ புராதனமான மூலிகை சேர்ந்துள்ளது.


சாந்தி அசோகா

சிறந்த கர்ப்பாசய ஔஷதம்

சாந்தி நகரம், தணுகு, மேல்கோதாவரி ஜில்லா

பூரண விற்பனை ஏஜண்டுகள் :
ஸ்ரீ கிருஷ்ண ஜெனரல் ஸ்டோர்ஸ், தணுகு

மதராஸ் ஸ்டாக்கிஸ்டுகள் :
எஸ். விஸ்வநாதம் & கம்பெனி,
44, பந்தர் தெரு, சென்னை.



குழந்தைகளுக்கு ஆரோக்கியத்துடன் தேக புஷ்டியையும் மூளை வளர்ச்சியையும் கொடுப்பது **பெரீஸ் பிஸ்கட்டுகள்** என்று ஒவ்வொரு தாய் தந்தையர்களும் அறிந்திருப்பதால் அவர்கள் எப்பொழுதும் **பெரீஸ் பிஸ்கட்டுகளையே** விரும்புகிறார்கள்.

பெரீஸ்

பிஸ்கட்ஸ்

குழந்தைகளை போஷித்து வளர்க்கும் ஆகாரம்
சிற்றுண்டிகளுக்கு சிறந்ததோர் உணவு

PERRY & CO. Biscuits Manufacturers, Usilampatti

யிருக்கிறது. கூடிய சீக்கிரம் எனக்கு விடுதலை கிடைத்து விடும். கோட்டைக்கு வெளியே போகக்கூடிய நாள் விரைவிலே வரும். சக்கரவர்த்தி அவ்வாறு சொல்லி யனுப்பியவுடன், ஸ்ரீ ராமபிரானின் கோதண்டத்திலிருந்து கிளம்பிய அம்பைப் போல் நான் நேரே அங்கு வந்து உன்னைப் பார்ப்பேன்.

என் செல்வமே! ஒவ்வொரு சமயம் நினைத்தால் இந்த ராஜ்யம் என்னத்திற்கு, யுத்தம் என்னத்திற்கு என்றெல்லாம் தோன்றுகிறது. இதெல்லாம் ஒரு சொப்பனமாயிருக்கக்கூடாதா என்றும் நினைக்கிறேன். திடீரென்று கண் விழித்து எழுந்ததும், நான் சக்கரவர்த்தி குமாரன் இல்லை,— உன் தகப்பனரிடம் சிற்பக் கலை கற்றுக் கொள்ளும் சீடன் — என்று ஏற்பட்டால், எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்? அப்போது உனக்கும் எனக்கும் இடையே ஒரு தடையும் இராதல்லவா? இப்படி எட்டுமாத காலமாக உன்னை வந்து பார்க்காமல் இருந்திருப்பேனா?"

* * *

ஓலையை ஒரு தடவை முழுதும் படித்த பின்னர், இன்னொரு தடவையும் சிவகாமி படித்தாள். பிறகு ரதியைப் பார்த்து, "ரதி! பல்லவ குமாரரிடமிருந்து வந்த ஒவ்வொரு ஓலையையும் உனக்குப் படித்துக் காட்டினேனல்லவா? இந்தத் தடவை முடியாது; முடியவே முடியாது! படித்துக் காட்டினாலும் உனக்கு விளங்காது!" என்றாள்.

பிறகு, ஓலையை எடுத்துக்கொண்டு, பின்னால் இருந்த மகிழ மரத்தின் மேல் இரண்டு அடி ஏறினாள். மேலே கிளைகள் முளைத்திருந்த இடத்தில் காணப்பட்ட பொந்தில் கையை விட்டுத் திரும்ப எடுத்த போது அவளுடைய கையில் ஏழெட்டு ஓலைகள் இருந்தன. அந்த ஓலைகளை ஒவ்வொன்றாய் எண்ணிப் பார்த்து விட்டுத் தன்னிட மிருந்ததையும் சேர்த்து மறுபடியும் பொந்திற்குள் வைத்து விட்டுக் கீழே இறங்கினாள்.

"ரதி! வா! போகலாம்! சுகப் பிரம்ம ரிஷியே! வாரும்! வீட்டுக்குப் போகலாம். அப்பா சாப்பிடக் காத்துக் கொண்டிருப்பார். மாமல்லரின் ஓலையைப் படித்துக் காட்டவில்லையென்று என் பேரில் உங்களுக்குக் கோபமா? கோபம் வேண்டாம். வாருங்கள்! நாளைக்கு வந்து உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன். நாளைக்கு மட்டுந்தானா? என் வாழ்நாள் உள்ளவரையில் ஒவ்வொரு நாளும் படிப்பேன். ரதி! குமார சக்கரவர்த்தியைப் பற்றி நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? சுக மகா முனிவரே! மாமல்லர் மகா கவியாக்கும்! காளிதாஸனையும் பாரவியையும் விடப் பெரிய மகா கவி. அவருடைய கவிதைக்குப் பாத்திரமான பெண் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏழைச் சிற்பியின் மகள் சிவகாமி!" — இவ்விதம் ரதியுடனும் சுக முனிவருடனும் மாறி மாறிப் பேசிக் கொண்டே சிவகாமி வீட்டை நோக்கிச் சென்றாள்.


* * *

காட்டு மரங்களுக்குள்ளே சிவகாமி மறைந்ததும், தாமரைக் குளத்தின் அருகில் இருந்த மற்றொரு பெரிய மரத்தின் மறைவிலிருந்து நாகநந்தி அடிகள் வெளிப்பட்டார். அவர் மெள்ள நடந்து வந்து, சிவகாமி ஒளித்து வைத்த மரப் பொந்திலிருந்து ஓலைகளை எடுத்தார். ஒவ்வொன்றாக அவற்றை விரைவாகப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார்.



அவ்விதம் வாசித்து வந்த போது அவர் விட்ட பெருமூச்சானது, நாகப் பாம்பின் சீறலைப் போல் தொனித்தது.

அருகே நெருங்கி வந்தாய். என் முகத்துக்கு வெகு சமீபத்தில் உனது பொன் முகத்தைக் கண்டேன். காலையில் மலர்ந்த குவளை மலர்களில் பனித்துளி நிற்பதுபோல், உன் நீண்ட கண்களின் முனையில் இரு கண்ணீர்த் துளிகள் நின்றன. உன்னுடைய மூச்சுக் காற்று என் முகத்தில் பட்டது.



அவ்வளவு அருகில் வந்திருந்த உன்னைத் தழுவி அணைத்துக் கொள்ள வேண்டுமென்று என்னுடைய தேகத்தின் ஒவ்வொரு அணுவும் துடிதுடித்தது. ஆனாலும், நான் அவ்விதம் செய்யவில்லை.

என் உள்ளத்தில் ஒரு சந்தேகம் தோன்றியிருந்தது. உன்னைத் தொட்டேனானால், உன் திருமேனியானது நிலாமதியின் கதிராகவும், மல்லிகையின் மணமாகவும், அன்னப் பட்சியின் மென்மையாகவும், இந்தோளத்தின் இன்னிசையாகவும் தனித் தனியே பிரிந்து மறைந்து விடுமோ என்று பயந்தேன்.

இந்த பயத்தை அறிந்து கொண்டவன்போல் நீ உன் செவ்விதழ்கள் சிறிது அகல, முத்துப் போன்ற பற்களின் நுனி தெரிய, குறுநகை செய்தாய்! உன் வதனம் என்னை அமுத போதையில் ஆழ்த்திக் கொண்டு இன்னும் அருகே நெருங்கிற்று.

ஆ! என்ன சொல்வேன் என் துரதிர்ஷ்டத்தை! அந்தச் சமயத்தில் எங்கேயோ ஒரு நாகப் பாம்பின் சீறல் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தேன். ஒரு மரக் கிளையில் இரண்டு பட்சிகள் உட்கார்ந்து, ஒன்றின் மூக்கை ஒன்று தொட்டும், கலகலவென்று சப்தித்தும் விளையாடிக் கொண்டிருந்தன. அந்த மரத்தின் அடிக் கிளையிலிருந்து ஒரு நாகப்பாம்பு — கருநிறமும் மஞ்சள் நிறமும் கலந்த உடலுடைய நீண்ட பாம்பு — அந்தப் பட்சிகள் இருந்த கிளையை நோக்கிச் சர சர வென்று ஏறிக்கொண்டிருந்தது. அந்த நாகத்தின் சீறலைத்தான் நான் கேட்டதாகத் தெரிந்து கொண்டேன். அந்தக் கணத்தில் உன்னைக் கூட மறந்து, என் உடைவாளை அவசரமாய் எடுத்தேன்.

அவ்வளவுதான்; விழித்துக் கொண்டேன்.

என் கண்ணில் வளரும் பொன்னரசியே! சொப்பனங்களிலும் அவற்றின் பலன்களிலும் நம்பிக்கை இல்லாதவன் நான். ஆனாலும், இந்தக் கனவுக்கு ஏதாவது அர்த்தம் உண்டா என்று அடிக்கடி என்னையறியாமல் எண்ணம் உண்டாகிறது. உனக்கு ஏதேனும் அபாயம் வருமென்பதைக் குறிப்பிடுகிறதோ என்றுகூட ஐயுறுகிறேன்.

யுத்தம் நெருங்கி வருகிறபடியால் நீ ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். ஆனால், எவ்விதக் கவலையோ, பயமோ, வேண்டாம்! என் கையிலே வாள் இருக்கும் வரையில், என் உடம்பில் உயிர் இருக்கும்வரையில் உனக்கு அபாயம் எதுவும் நேராது.

ஆ! பொழுது விடியப் போகிறது. கீழ்வானம் வெளுக்கிறது. இரண்டாவது விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

எனக்கு ஒரு புதிய தோழன் கிடைத்திருக்கிறான். அவன் யார் தெரியுமா? மதயானை மேல் வேல் எறிந்து உன்னையும் உன் தந்தையையும் காப்பாற்றிய வீர வாலிபன்தான். அவனைக் கோட்டைக் காவலுக்காகச் சக்கரவர்த்தி அனுப்பியிருக்கிறார். நேற்றிரவெல்லாம் நானும் அவனும் பேசிக் கொண்டிருந்தோம். பெரும்பாலும் உன்னைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம்.

சக்கரவர்த்தியிடமிருந்து உங்களுக்கு அவன் செய்தி கொண்டு வருகிறான். நீங்கள் காஞ்சிக் கோட்டைக்காவது வந்துவிட வேண்டும், அல்லது சோழ நாட்டுக்குப் போய்விட வேண்டும் என்று சக்கரவர்த்தி சொல்லியனுப்பியிருக்கிறார். ஆனால், நான் அங்கு வந்து உங்களைப் பார்த்துப் போகும் வரையில் ஒரு முடிவும் செய்ய வேண்டாம்.


யுத்தம் நெருங்கி வருகிறதானது ஒரு காரியத்துக்கு ரொம்பவும் நல்லதா

இவ்விதம் கூறி, ரதியின் முகவாய்க் கட்டைத் தடவிக் கொடுத்துவிட்டுச் சிவகாமி மீண்டும் ஓலையைப் பார்த்தாள். கையிலே ரொம்பவும் பிடித்தமான பணியாரத்தை வைத்துக் கொண்டிருக்கும் குழந்தை, அதைச் சாப்பிட்டால் ஆகிப்போய் விடுமே என்ற பயத்தினால் தயங்குவதுபோல், சிவகாமியும், ஓலையைப் படிக்கும் இன்பத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டேயிருந்து விட்டுக் கடைசியில் படிக்கலானாள். ஓலையில் பிராகிருத பாஷையில் எழுதியிருந்தது வருமாறு:

"பாரத நாட்டின் புகழ்பெற்ற சிற்ப சக்கரவர்த்தியின் செல்வக் குமாரி, சௌந்தரிய தேவதை அடி பணிந்து போற்றும் ஸுகுமாரி, பரத நாட்டிய சாஸ்திரம் வலம் வந்து தொழுது வணங்கும் மகாராணி, மாமல்ல பல்லவனின் இருதய சிம்மாசனத்தில் கொலுவீற்றிருந்து தனியரசு புரியும் சக்கரவர்த்தினி ஆகிய சிவகாமி தேவிக்கு:

இனிமேல் ஓலை எழுதமாட்டேன், நானே நேரில் வந்துவிடுவேன் என்று முன் ஓலையில் எழுதியிருந்தேன். அதற்கு மாறாக இதை நான் எழுதுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

என் அன்பே! என் ஆருயிரே! முந்தா நாள் இரவு நான் ஒரு கனவு கண்டேன். அதை நினைத்தாலே என் தேகமெல்லாம் சிலிர்க்கிறது. சொல்ல முடியாத இன்பம் நிறைந்த அந்த அதிசயக் கனவைக் கேள்.



கனவிலே நான் தூங்கிக் கொண்டிருந்தேன். எங்கே தூங்கிக் கொண்டிருந்தேன் என்று தெரியவில்லை. ஆகாய வெளியிலே அந்தரத்தில் காற்றுப் படுக்கையில் மிதந்து கொண்டே தூங்கியதாகத் தோன்றியது. அந்த அதிசயமான சொப்பனத் தூக்கம் எதனாலோ திடீரென்று கலைந்தது. கண்களை விழித்துப் பார்க்க முயன்றேன். ஆனால், ஏற்கனவே, கண்கள் விழித்துத்தான் இருந்தன என்று தெரிந்தது. மேலும் கீழும் நாலாபுறமும் ஒரே காடாந்தகாரமாயிருந்தபடியால், என் கண்கள் திறந்திருந்தும், மூடியிருந்தனவோ என்று நான் ஐயப்பட நேர்ந்தது.

அந்த அதிசயமான இருட்டைப் பற்றி, உன் கண் இமையில் தீட்டிய மையைக் காட்டிலும் கரியதாய் என்னைச் சுற்றிலும் படர்ந்திருந்த இருட்டைப்பற்றி நான் சிந்தித்து வியந்து கொண்டிருக்கையில், அந்தக் காரிருளில் எனக்குச் சற்று மேலே வட்ட வடிவமான ஒரு ஒளி தோன்றக் கண்டேன். வர வர அந்த ஒளி வட்டம் அகன்று வந்ததோடு, அதன் ஜோதியும் அதிகமாகி வந்தது. கண்களைக் கூசச்செய்யாமல் குளிர்ந்து விளங்கிய அந்தப் பொன்னிற ஒளி வட்டம் வர வர என்னை நோக்கி நெருங்கி வந்ததைக் கண்டேன்.

அருகே வந்ததும், அந்த ஒளி வட்டம் உன்னுடைய திவ்ய வதனந்தான் என்று தெரிந்தபோது, எனக்குண்டான வியப்பையும் களிப்பையும் எவ்வாறு சொல்வேன்?

சிவகாமி! விரைவிலேயே உன்னுடைய உருவம் முழுவதும் தெரிந்தது. அந்த எல்லையில்லா அந்தகாரத்தின் நடுவில் உன் பொன் உருவத்தைப் பார்க்கப் பார்க்க, எனக்கு ஒரு விசித்திரமான எண்ணம் உதயமாயிற்று.

உன்னுடைய உருவமானது எங்களுடைய தேகங்களையெல்லாம்போல் இரத்தம், சதை, எலும்பு, தோல் இவைகளினால் ஆனதாக எனக்குத் தோன்றவில்லை.

நிலாமதியின் இளங் கதிரையும், மல்லிகைப்பூவின் இன்ப மணத்தையும், அன்னப் பட்சியின் இறகிலுள்ள மென்மையையும், இந்தோள ராகத்தின் இன்னிசையையும் கலந்து உன் தூய திருமேனியைப் பிரம்மன் படைத்திருக்க வேண்டுமென்று கருதினேன்.

என் ஆருயிர் அமுதே! இவ்வாறு நான் உன் மேனி அழகாகிய மதுவை அருந்தி மயங்கி நிற்கையில், நீ என்

யத்தின் மகாராணியாகும் போது. உங்களுக்கெல்லாம் காஞ்சி அரண்மனையில் இடமில்லாமல் செய்து விடுகிறேன்......"

அப்போது அந்த விஷமம் நிறைந்த சுகப்பிரம்மரிஷி, "மாமல்லா! மாமல்லா!" என்று உச்சஸ்தாயியில் கீச்சுக் குரலில் கத்திற்று.

"ஓஹோ! அப்படியா சேதி? நான் அந்தப்புரத்திலிருந்து உங்களைத் துரத்தி விட்டால், மாமல்லரிடம் சலுகைக்குப் போவோம் என்றுசொல்கிறீரா? நடக்காது, முனிவரே, நடக்காது! பல்லவ சிங்காதனத்திலே சிவகாமி தேவி அமர்ந்தவுடனே முதல் காரியமாக, இந்த ராஜ்யத்திலே சோம்பித் திரியும் ஆண்டிகள், பிக்ஷுக்கள், காவித் துணி வேஷந்தரித்த சந்நியாசிகள், மண்டை ஓட்டு மாலை அணிந்த காபாலிகர்கள் இவர்களையெல்லாம் நாட்டை விட்டு ஓட்டி விடப் போகிறேன். யோக்கியமாகக் கலியாணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துகிறவர்களுக்குத்தான் பல்லவ ராஜ்யத்தில் அப்புறம் இடம் இருக்கும். தெரியுமா? நான் இந்த ஓலையைப் படிக்கும் வரையில் உம்முடைய திருவாயை மூடிக் கொண்டு சும்மா இரும்......!"

சொன்னதைக் கேட்க மாட்டேன் என்பதுபோல், சுகர், "ரதி! ரதி!" என்றார்.

சிவகாமி திரும்பிப் பார்த்தால், அங்கே ரதி துள்ளி ஓடி வந்து கொண்டிருந்தது.

"ரதி! வந்து விட்டாயா? அந்தப் புரத்துக்குத் தகுந்த சகி நீதான். இந்த வாயாடி சுகர் அல்ல. நீ எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு வாயைத் திறக்காமல் மௌனமாயிருப்பாய். இந்த ரிஷியோ எதையும் அரையும் குறையுமாய்க் கேட்டுக் கொண்டு ஏதாவது உளறிக் கொட்டுவார்; நாலுபேர் இருக்கும்போது மானத்தை வாங்கிவிடுவார்! இந்த ரிஷி இங்கிருந்து தொலைந்து போனபிறகு உனக்கு மாமல்லரின் ஓலையைப் படித்துக் காட்டுகிறேன். ரதி! இது, குமார சக்கரவர்த்தியிடமிருந்து வந்த பட்டாவது ஓலை. தெரியுமா? ஒருவரிடமும் சொல்லி வைக்காதே!"



துக்குள் ரிஷிகள் வரலாமா? அதிலும், இது எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம்? பூஜை வேளையில் கரடி புகுந்தது போல், ஒரு கன்னிப் பெண் தன் காதலரின் ஓலையைப் படிக்கப் போகும் தருணத்திலா நீர் வந்து சேருவது? போம்! போம்!" என்று கையை ஓங்கி வீசியபோது, அந்தக் கைவீச்சானது, கன்னத்தை நெருங்கி வரும் காதலனுடைய கரத்தைத் தள்ளும் அபிநயமாகவே தோன்றியது.

அதற்கேற்றாற்போல், அந்தச் சுக மகா முனிவரும், "மாட்டேன்" "மாட்டேன்" என்றார்.

சிவகாமி மறுபடியும் சிரித்துவிட்டுக் கூறினாள் :—"ஓ பொல்லாத வேஷதாரி ரிஷியே! கதைகளிலே வரும் அரசிளங் குமரிகள் எல்லாரும் அந்தப் புரத்தில் உம்மை வைத்துக் கொண்டு எப்படித்தான் இரகசியம் பேசினார்களோ, தெரியவில்லை. இருக்கட்டும், இருக்கட்டும், நான் பல்லவ சாம்ராஜ்





பேசிக் கொண்டிருந்தேன்' என்றார். 'அவ்வளவுதானா?' என்று கேட்டேன். 'அப்புறம் ஓலை எழுதினேன்' என்றார். 'யாருக்கு?' என்றேன். 'அப்பாவுக்கு' என்றார். 'சரி போகட்டுமா?' என்றேன். மௌனமாயிருந்தார். 'ஏன் விழிக்கிறீர்கள்? உண்மையைச் சொல்லுங்கள்!' என்றேன். 'இன்னொரு ஓலையும் எழுதினேன்' என்றார்......"

"அண்ணா! ஓலையைக் கொடுங்கள்" என்று சிவகாமி கேட்டபோது, அவள் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"கொடுக்கிறேன், தங்கச்சி! கொடுக்கிறேன். ஆனால், ஓலையை வாங்கிக் கொண்டதும் நீ ஓடிப்போய் என்னைத் திண்டாட்டத்தில் விடக் கூடாது..."

"என்ன திண்டாட்டம், அண்ணா?"

"போன தடவை என்னிடம் ஓலையை வாங்கிக் கொண்டதும் ஒரே ஓட்டமாய் ஓடிப் போய் விட்டாயல்லவா? அதனால் எனக்குச் சங்கடமாய்ப் போய்விட்டது. தெரியுமா? 'ஓலையை வாங்கிக் கொண்டதும் என்ன செய்தாள்? முகம் எப்படி இருந்தது? கண் எப்படியிருந்தது?' என்றெல்லாம் மாமல்லர் கேட்டபோது நான் விடை சொல்லத் தெரியாமல் விழித்தேன்......"

"போதும், அண்ணா. வேடிக்கை! ஓலையைக் கொடுங்கள்" என்றாள் சிவகாமி.

இன்னும் கொஞ்சம் வேணுமென்று தவக்கம் செய்துவிட்டுக் கடைசியாகக் கண்ணபிரான் இடுப்பில் செருகியிருந்த ஓலையை எடுத்துக் கொடுத்தான்.

சிவகாமி அதை வாங்கிக் கொண்டபோது அவளுடைய கை நடுங்கிற்று; உடம்பெல்லாம் பதறிற்று.

அப்புறம் ஒரு கண நேரங்கூட அங்கே அவள் நிற்கவில்லை. வீட்டுக்குள்ளும் போகவில்லை. வீட்டின் வலப் பக்கத்தில் சென்ற பாதை வழியாகத் தாமரைக் குளத்தை நோக்கி விரைந்து சென்றாள்.

அத்தியாயம் 8

நாகம் சீறுகிறது!

அரண்யத்தினுள் சூழப்பட்ட தாமரைக் குளக் கரையில், மகிழ மரத்தினடியில் போட்டிருந்த மரச் சிங்காதனத்தில் சிவகாமி அமர்ந்து, அவளுடைய மார்க்கச்சில் சேர்த்துச் செருகியிருந்த ஓலையை எடுத்தாள்.

"பொல்லாத ஓலையே! பல்லவ குமாரரின் காதல் என் உள்ளத்தைக் குத்திப் புண் செய்வது போதாதென்று, நீயும் என் நெஞ்சைக் குத்துகிறாயா?" என்று சொல்லிக் கொண்டே, ஓலையைக் கண்ணிலே ஒத்திக் கொண்டாள். பிறகு சற்றுத் தயங்கி, சட்டென்று தன் செவ்விதழ்களில் அதை ஒரு தடவை வைத்து எடுத்து விட்டு, வெறுமையாயிருந்த மேல் ஓலையை அப்புறப் படுத்தினாள். உள் ஏட்டில் முத்துப்போல் பொறித்த அழகிய சின்னஞ்சிறு எழுத்துக்கள் காணப்பட்டன. கண்களில் ஆர்வம் ஜொலிக்கச் சிவகாமி படிக்கத் தொடங்கியபோது, "அக்கா! அக்கா!" என்ற பின்னாலிருந்து வந்த சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டாள். திரும்பிப் பார்த்தால், அந்த மரச் சிங்காதனத்தின் கைப்பிடிமீது ஒரு பச்சைக் கிளி உட்கார்ந்து அவளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது!

கிண்கிணி ஒலிப்பதுபோல் கலகலவென்று சிரித்து விட்டு, சிவகாமி அந்தக் கிளியைப் பார்த்து, "ஓ சுகப் பிரம்ம மகாமுனியே! உமக்கு என்ன இங்கே வேலை? இளம் பெண்கள் தனிமையாக இருக்கும் அந்தப்புரத்

"அப்படிச் செய்யப் போகிறீர்களா, அண்ணா?"

"அப்படிச் செய்வதில் எனக்கும் இஷ்டந்தான். ஆனால் சின்னக் கண்ணன் குறுக்கே நிற்கிறான்."

"அது யார், அண்ணா, சின்னக் கண்ணன்?"

"உனக்குத் தெரியாதா, தங்கச்சி?"

"தெரியாதே, அண்ணா! சின்னக் கண்ணன் என்கிறது யார்? எங்கே இருக்கிறான்?"

கண்ணன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு, "யோசித்துப் பார், தங்கச்சி!" என்றான்.

சிவகாமி "என்னத்தை யோசிக்கிறது?" என்றாள்.

"இவ்வளவுதானா? தங்கச்சி இவ்வளவு புத்திசாலியாயிருந்தும் சின்னக் கண்ணன் எங்கே இருப்பான் என்று கண்டு பிடிக்க முடியவில்லையா?" என்று கண்ணன் கேட்டு விட்டு, இன்னும் தாழ்ந்த குரலில், "கமலியின் வயிற்றில் இருக்கிறான்" என்று கூறிப் புன்னகை புரிந்தபோது அவன் முகத்தில் அசடு வழிந்தது.

கமலி கர்ப்பமாயிருக்கிறாள் என்பதைச் சிவகாமி தெரிந்துகொண்டு, "அப்படியா, அண்ணா, சந்தோஷம்!" என்றாள். அவள் உடம்பை அப்போது என்னமோ செய்தது. கமலியை உடனே பார்க்கவேண்டும், அவளைக் கட்டிக் கொள்ளவேண்டும் என்று ஆசை உள்ளத்தில் உண்டாயிற்று.

கண்ணபிரான், "தங்கச்சி! அந்த சந்தோஷத்தை நீ நேரிலேயே வந்து சொல்லி விட்டால் தேவலை. கமலிக்கு இன்னும் கொஞ்ச காலம் காஞ்சியை விட்டுப் புறப்பட முடியாதாம். தங்கச்சிதான் வந்து அவளைப் பார்க்க வேண்டுமாம். தங்கச்சியிடம் சொல்வதற்கு என்னவெல்லாமோ சமாசாரம் மூட்டை கட்டி வைத்திருக்கிறாளாம்" என்றான்.

"எனக்கும் அக்காவைப் பார்க்க ஆசைதான், அண்ணா! ஆனால் எப்படி முடியும்" என்றாள் சிவகாமி.

"ஏன் முடியாது, தங்கச்சி! எப்படியும் நீங்கள் இனிமேல் இங்கே இருக்கச் சரிப்படாது. வாதாபிப் படை நெருங்கி வந்து கொண்டிருக்கிறதாம். கோட்டைக்கு அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து இப்போதே ஜனங்கள் போக ஆரம்பித்து விட்டார்கள். உங்களை உடனே கோட்டைக்குள் வந்து விடும்படி கமலி சொல்கிறாள். நீங்கள் இங்கே தனியாகக் காட்டுக்குள் இருப்பதை நினைத்தாலே அவளுக்கு என்னமோ செய்கிறதாம். இராத்திரியில் தூக்கம் தூக்கமாய் வருகிறதாம்! சாப்பிட்டவுடனே பசிக்கிறதே யில்லையாம்!......"

"வேடிக்கை இருக்கட்டும், அண்ணா! கமலியை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றாள் சிவகாமி.

"ஆமாம், தங்கச்சி! பேச்சை மாற்றுகிறாயல்லவா? அதனால்தான், நான்கூடக் கமலியிடம் சொன்னேன்; அவர்களெல்லாம் நம்முடைய ஏழைக் குடிசையில் வந்து தங்கியிருப்பார்களா என்று......"

"அண்ணா! அப்படிச் சொல்ல வேண்டாம். நீங்களும் கமலியும் இருக்கும் இடத்தில் ஏழ்மை ஏது?...... உங்களுடைய குடிசை எனக்கு அரண்மனையை விட மேல்......" என்று சொல்லி வந்தவள் சட்டென்று நிறுத்தினாள். ஏதோ ஒரு எண்ணம் குறுக்கிட்டு அவளைத் தடை செய்ததாகத் தோன்றியது.

பிறகு, "அதற்கென்ன பார்த்துக் கொள்ளலாம், அண்ணா! அப்பாவிடம் சொல்கிறேன்......வேறு ஒன்றும் விசேஷமில்லையா?" என்று சிவகாமி கேட்டபோது, அவள் குரலில் ஆர்வம் தொனித்தது.

"அப்படியொன்றும் பிரமாத விசேஷமில்லை. ஒரே ஒரு சின்ன விசேஷம் மட்டும் உண்டு! இன்று காலை நான் ரதத்தை ஓட்டிக் கொண்டு போய் அரண்மனை வாசலில் நிறுத்தியதும், மாமல்லர் என்னைத் தனியாகக் கூப்பிட்டார். 'பிரபு! ஏன் ஒரு மாதிரியிருக்கிறீர்கள்?' என்று கேட்டேன். 'ஒன்றுமில்லை, கண்ணா! இராத்திரி தூங்கவில்லை' என்றார். 'அதுதான் முகத்தைப் பார்த்தால் தெரிகிறதே? ஏன் தூங்கவில்லை?' என்றேன். 'புது தளபதியுடன்

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 7

சின்னக் கண்ணன்

ஆயனரும் பரஞ்சோதியும் பேசிக் கொண்டிருக்கையில், வாசற்படியருகில் நின்று கண்ணபிரான் சமிக்ஞை செய்ததைச் சிவகாமி கவனித்தாள் என்று சொன்னோமல்லவா? அவள் கவனித்ததைத் தெரிந்து கொண்டதும் கண்ணபிரான் வெளியே சென்றான். சற்று நேரத்துக்கெல்லாம் சிவகாமியும், பேசிக் கொண்டிருந்தவர்களின் கவனம் தன் மீது செல்லாதபடி மெள்ள நடந்து வீட்டுக்கு வெளியே வந்தாள்.

"அண்ணா! என்னை அழைத்தீர்களா? ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டாள்.

"விசேஷமில்லாமல் கூப்பிடுவேனா?" என்றான் கண்ணன்.

"என்ன? கமலி அக்கா ஏதாவது சொல்லியனுப்பினாளா?"

கண்ணபிரான் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "ஆமாம்; அதோ உள்ளே வந்திருக்கிறானே, அந்தப் பிள்ளைக்கு விஷம் கொடுக்கச் சொன்னாள்" என்றான்.

சிவகாமி, "இதென்ன வேடிக்கை, அண்ணா! எதற்காக?" என்று புன்னகையுடன் கேட்டாள்.

"அம்மணி! விஷங் கொடுப்பது வேடிக்கையான விஷயமா?"

"இல்லை; அதனால்தான் 'எதற்காக' என்று கேட்கிறேன்."

"குமார சக்கரவர்த்திக்கு இவன் போட்டியாக வந்திருக்கிறான் தாயே!"

"எதிலே போட்டி?"

"இராஜ்யத்துக்குத்தான்! ஊரிலே எல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள் — 'சக்கரவர்த்தி இவனைத் தத்து எடுத்துக் கொண்டு விட்டார்; இவனுக்குத்தான் ராஜ்யத்தைக் கொடுக்கப் போகிறார்; மாமல்லருக்கு ராஜ்யம் இல்லை' என்று."

"ஆஹா! இது மட்டும் உண்மையாயிருந்தால்...... நிஜமாகச் சொல்லுங்கள், அண்ணா!"

"தங்கச்சி! அப்படி நேர்ந்தால் உனக்கு அதில் சந்தோஷம் போலிருக்கிறதே?"

"ஆமாம்; அதிலும் சந்தேகமா? இந்த ராஜ்யம்தானே எனக்கும் அவருக்கும் குறுக்கே நிற்கிறது? எனக்கு அவரும் அவருக்கு நானும் போதாதா? இராஜ்யம் என்னத்திற்கு?"

"எல்லாப் பெண்களும் ஒரே மாதிரிதான் போலிருக்கிறது; கமலி கூட அப்படித்தான் சொல்கிறாள்."

"என்ன சொல்கிறாள்?"

"நீ இப்போது சொன்னது போலத்தான் சொல்கிறாள். 'உனக்கு நானும் எனக்கு நீயும் போதாதா? அரண்மனைச் சேவகம் என்னத்திற்கு? அரை நாழி வீட்டிலே தங்க முடியாமல் அலைவது என்னத்திற்கு? வா! எங்கேயாவது கிராமத்துக்குப் போய் நிம்மதியாயிருக்கலாம்' என்கிறாள்."

அன்றிரவு நடந்த பாருப்பள்ளி ஸ்ரீ ராமகிருஷ்ண பத்துலுவின் கச்சேரி சென்ற வாரக் கச்சேரிகள் எல்லாவற்றையும் தூக்கியடித்து விட்டது. சாரீரம் கட்டையாயினும் கனமும் கனிப்பும் கொண்டது. சாதகமோ அசாத்தியம். வழியோ அசல் கர்நாடகம். ஜயமனோகரி என்ற அபூர்வ ராகத்துடன் கச்சேரி ஆரம்பித்தார். அதைவிட அழகாயிருந்தது ஆரபி. அதற்குமேல் இருந்தது தன்யாசி. பல்லவி ராகத்துக்காக எடுத்துக்கொண்ட சூர்யகாந்தமோ இணையற்ற சூர்யகாந்தியுடனேயே பிரகாசித்தது. பல்லவி, நிரவல், ஸ்வரப் பிரஸ்தாரம் எல்லாம் மூன்று காலத்திலும் ஜிலுஜிலுப்பா யிருந்தன. அநாயாசமாய் மேல் பஞ்சமம் பிடித்தார். கீழ்ஸ்தாயி பஞ்சமமும் கனிப்பாய்க் கேட்டது.

கேட்டுப் பாருங்கள்!

அடுத்த வாரத்து வானொலி நிகழ்ச்சிகளில் பின்வரும் கச்சேரிகளை நாங்கள் கேட்டுப் பார்க்கிறோம்; நீங்களும் கேட்டுப் பாருங்கள்:

12வ. சனிக்கிழமை சென்னையில் ஸ்ரீ தண்டபாணி தேசிகர் கச்சேரி. அன்று திருச்சியில், மதுரமணியின் 'உள்ளபடி'தான்; பொய் புனை சுருட்டுக் கிடையாது; இல்லாததைச் சொல்ல மாட்டார்கள்.

13வ. திருச்சியில் மன்னார்குடி சாவித்திரி அம்மாளின் கோட்டு வாத்தியத்தைக் கேட்டுப் பார்க்காமல் தீராது. ஏனெனில் 'தாய்மொழி'யைப் பற்றிப் பூர்வி கல்யாணி ராகத்தில் அவர் ஒரு கீர்த்தனை பாடுகிறார். வேறு பாஷைகளில் 'வீணாக அலையாதே' என்று கரகரப்ப்ரியாவில் உபதேசித்துவிட்டு, இனிய தமிழிலே பாட 'என்ன புண்ணியம் செய்தேனோ' என்று உசேனியில் பரவசமாகிறார்.

14வ. திருச்சியில் கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளையின் வயலின்; நன்றாயிருக்குமென்று நம்பிக் கேட்கலாம்.

15வ. திருச்சியில் ஸ்ரீமதி கிருஷ்ணவேணி ராதாகிருஷ்ணன் காலையில் வீணைகானம் செய்கிறார். மாலையில் ஸ்ரீ ஜி. வி. சுப்பிரமண்யம் தமிழ் வாக்கேய கர்த்தாக்கள் பலருக்கும் பிரதிநிதித்வம் கொடுத்துக் கௌரவிக்கிறார்.

16வ. சென்னையில் ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமண்யத்தின் சிஷ்யர்களான பல பாலசுப்பிரமண்யர்களில் ஒரு பாலசுப்பிரமண்யம் பாடுகிறார். "ஆர் உம்மைப்போல் ஆதரிப்பவர்" என்னும் அடாணா கீர்த்தனமும் நிகழ்ச்சியில் இருக்கிறது. ஜி. என். பி. யின் சங்கீதபாணிக்கு இப்போது எங்கே பார்த்தாலும் அமோகமான ஆதரவு இருப்பதால், ஒவ்வொரு கச்சேரியிலும் பாட வேண்டிய பாட்டுத்தான்.

17வ. திருச்சியில் மகாராஜபுரம் விசுவநாதய்யர் "முகத்தைக் காட்டி" என்று பைரவியில் ஆரம்பிக்கிறார்; குரலையும் கொஞ்சம் காட்டுவார் என்று நம்புகிறோம்.

19வ. சென்னையில் ஸ்ரீ கே. எஸ். நாராயண ஐயங்கார் 'கோட்டு' வாசிக்கிறார்; ஆனால் 'கொட்டு' அடிக்க மாட்டார்!

ஆகாசவெடி

"ஸ்ரீ ஜே. எப். ரூதர் போர்டு என்பவரால் எழுதப்பட்ட 'யார் உலகத்தை ஆள்வார்?' என்ற புத்தகம் பம்பாய் சர்க்காரால் பறிமுதல் செய்யப்பட்டது."

—ஒரு செய்தி.

அடுத்தபடி உலகத்தை ஆளப்போகிறவர் வந்ததும் பறிமுதல் செய்யப்பட்ட புஸ்தகங்களைத் திருப்பித் தந்துவிடுவார் என்று நம்புகிறோம்.

★

"உடைக்காத கட்டைகளை சில விறகு வியாபாரிகள் பொது ஜனங்களுக்கு விற்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இது சட்ட விரோதமாகும்."

—ஒரு செய்தி.

விறகு வியாபாரிகளுக்கு இந்தக் கட்டைகளை உடைப்பதைவிடச் சட்டத்தை உடைப்பது சுலபமாகத் தோன்றியிருக்கலாம்!

★

"பத்திரிகைப் பிரதிநிதிகள் கூட்டமொன்றில் ஜனாப் ஜின்னா காந்திஜியை முதல் தடவையாக 'மகாத்மா' என்று அழைத்தார்."

—ஒரு செய்தி.

வசிஷ்டர் வாயால் 'பிரம்ம ரிஷி' என்று சொன்ன மாதிரிதான்!

★

"பம்பாய்க் கவர்னர் பண்டரிபுரத்திலுள்ள ருக்மிணிதேவி ஆலயத்துக்கு விஜயம் செய்து தேவியின் ஆபரணங்களைப் பார்வையிட்டார். அபிஷேகம் ஒன்றும் செய்யவில்லை."

—ஒரு செய்தி.

நல்ல வேளை; யுத்த நிதிக்காக மேற்படி நகைகளை கவர்னர் எடுத்துக் கொள்ளாமல் விட்டதே அபிஷேகம் செய்த மாதிரிதான்!

★

"வங்கத்தில் மறுபடியும் பஞ்சம் வந்தால், காந்திஜி தாம் அங்கு போகப் போவதாகக் கூறுகிறார்."—ஒரு செய்தி.

அப்படியானால், காந்திஜி வங்கம் செல்வதை நாம் அடியோடு விரும்பவில்லை.

வான சஞ்சாரம்

"இசைத் தேனீ"

★

["சங்கீதக் கலைக்காகவே பிறந்து வளர்ந்து சங்கீதக் கலைக்காகவே உயிர் வாழ்கிறவர்" என்று சொல்லக்கூடிய ரஸிகர்கள் சிலரைக் கர்னாடக சங்கீத உலகத்தில் காணலாம். வாழ்க்கையிலே அவர்கள் வேறு ஏதாவது தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், அவர்களுடைய முக்கிய தொழில் சங்கீதம் கேட்பதுதான். அத்தகைய ரஸிகர்களில் ஒருவர் — சங்கீத சாஹித்யங்களில் சிறந்த அநுபவ ஞானம் படைத்தவர் — பரத நாட்டிய நுட்பங்களையும் நன்கு அறிந்தவர் — "கல்கி"யில் ரேடியோ விமரிசனம் எழுதியவர் இசைக்கிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். "இசைத் தேனீ"க்குச் சங்கீத விமரிசனம் புதியதல்ல; ஆனால் தமிழ் சீக்காரர்தான் புதிது. — ஆசிரியர்.]


★

ஆகஸ்டு மாதம் ரேடியோ சங்கீதம் நன்றாகவே ஆரம்பித்திருக்கிறது. இதற்குக் காரணம், நானும் இந்தத் தேதியிலிருந்தே வான சஞ்சாரம் ஆரம்பிக்கிறேன் என்பதாக இருக்கலாம். முதல் தேதி இரவு துறையூர் ராஜகோபால சர்மாவின் கானம் கனிப்பாயிருந்தது. நல்ல சாரீரம். நாமக்கல் நரசிம்ம அய்யங்காரின் பாணி அவருடைய சிஷ்யரிடம் விளங்குவது பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. ராகங்கள் தெளிவும் அழகும் கொண்டிருந்தன. தோடியும் காம்போதியும் குறிப்பிடத் தக்கவை. 'சாமஜ வரகமன,' 'எந்து தாகி நாடோ,' 'காணக்கண் கோடி வேண்டும்' என்ற உருப்படிகள் விறு விறுப்புடன் ரஸபாவம் நிறைந்திருந்தன.

2-ல் இரவு பாடிய ஸ்ரீமதி ருக்மணி வாஸுதேவனின் கீதம் மிகச் சிறப்பு வாய்ந்தது. 'வாதாபி கணபதிம்' என்ற கீர்த்தனத்தில் 'பிரணவ ஸ்வரூப' என்ற இடத்தில் நிரவலைக் கவனித்தபோது முதலில் மூக்கில் கை வைத்தேன். இனிமையான சாரீரத்திலிருந்து ஆரபி, கல்யாணி, காமவர்த்தினி, கமாஸ், பிஹாக் என்று ராகத்துமேல் ராகமாக அழகிய ஆலாபனங்களுடனும் இசையும் பிடிகளுடனும் வெளி வந்தன. இவர் யார் என்று யோசித்துப் பார்த்தேன். பழைய ஞாபகம் வந்தது. 15 வருஷத்துக்கு முன் சங்கீத வித்வத் சபையின் 12 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான ஒரு சங்கீதப் போட்டி ஏற்படுத்தப் பட்டது. அதில் பரிசு பெற்ற அநேகம் பெண்கள் கலந்து கொண்ட போதிலும் இயற்கை வரிவும், கேள்வி ஞானமும் சிறிது பயிற்சியும் கொண்ட ருக்மணி என்ற பெண்ணே முதல் பரிசு அடித்துக் கொண்டுபோய் விட்டாள். இப்படி ராகம் பாடுகிறவர்களுக்கு ஏன் பரிசு கிடைக்காது என்றார்கள் மற்றவர்கள். ஆனால் அக் காலத்திலிருந்த வரமான பிரக்யாதி உதவி படி அன்று ஸ்ரீமதி ருக்மணி வாஸுதேவனின் ரேடியோப் பாட்டில் தென்படவில்லை.

திருச்சி நிலையத்தில் 4-ல் இரவு பாடிய குமப கோணம் சாரநாயகி நல்ல சாரீர முள்ளவர். அசிநயத்துக்குரிய தமிழ்ப் பதங்களையே பெரும்பாலும் பாடினார். 'அம்மா ரா வம்மா,' 'யோசனு' என்ற கிருதிகளும் கலந்திருந்தன. அவ்வம்மையுடன் இன்னொரு மெல்லிய குரல் கேட்டது. நாட்டியத்தில் அழகிய பாணியுடன் இலங்கும் பட்டுலட்சுமிாள் குரல் என்று நினைக்கிறேன். நாட்டியக் கலையை அலங்கரிக்கும் இவ்விரு சகோதரிகள் பதம் பாடினால் நன்றாயிராமல் வேறு எப்படியிருக்கும்?

5-ம் தேதி சென்னையில் பாடியவர்கள் மொத்தத்தில் நன்கு அனுபவிக்கக் கூடிய சங்கீதத்தையே அளித்தார்கள். பிற்பகலில் என். ஆர். வெங்கடேசன் கன்னிய குரலுடன் சாருகேசி ராகமும் 'நீதானப்பா' என்ற தமிழ் உருப்படியும் பாடியதைக் குறிப்பிட வேண்டும்.



துறையூர் ராஜகோபால சர்மா

மாலையில் வைக்கம் வரன் வதிரியின் கானம் உயர்ந்ததாயிருந்தது. சாதாரணன்றி சாரீரம் போவில்லை. கொஞ்சம் கனம் கொண்டது. விருவும் பாவம் பொழிவும் கொண்ட ராக ஆலாபனங்களும் மற்ற உருப்படிகளும் மனத்தைக் கவர்ந்தன. ஆனால் கீழ் ஸ்தாயியில் கனம் குறைவு.

சோதா கடிதம்

திருவாங்கூர் திவான் ஸர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்களுக்கு அரசியல் மூட்டுக் கட்டை எழுதிக்கொள்வது :—

திவான் ஸார் !

நமஸ்காரம் : தாங்கள் நீடூழி வாழ்ந்து நெடுங்காலம் இருந்து சமஸ்தான காரியங்களைச் செவ்வனே நடத்தி வரப் பிரார்த்திக்கிறேன். எனக்குக் கொஞ்ச நாட்களாய் ஒரே பயமாக இருக்கிறது. எங்கே நான் இந்தியாவை விட்டே போய்விட வேண்டுமோ என்று நடுங்கிக் கொண்டிருக்கிறேன். ஜனாப் ஜின்னா தயவாலும், கர்னல் அமெரி துரையின் புண்ணியத்தாலும் அப்படி நிர்வாண கதி இதுவரை எனக்கு ஏற்படாமலிருந்தது. ஆனால் ராஜாஜி என்கிற மனிதர் எனக்குப் பரம சத்துருவாகத் தோன்றி விருக்கிறார். பாருங்கள் : அவர் ஜின்னாவைச் சரிக்கட்டி என்னை ஒழித்துக் கட்ட ஒரு காரியம் செய்தார். ஹிந்து - முஸ்லிம் சமரசத் திட்டம் ஒன்றைத் தயாரித்து காந்திஜியை ஏமாற்றி(!) சம்மதம் வாங்கிவிட்டார். என் பாதி அப்போதே வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்து விட்டது. எங்கே ஜின்னா ஏமாந்து போய் இதை ஒப்புக்கொண்டு விடுவாரோ, தேசத்தில் சிரஞ்சீவியாக வாழ்ந்து வரும் எனக்கு ஆபத்து வந்து விடுமோ என்று நடுங்கிக்கொண்டிருக்கிறேன்.

அப்புறம் பாருங்கள் : இந்த காந்தி சும்மா இருந்தாரா ? காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்களைக்கூட கலந்து யோசிக்காமல் பிரிட்டிஷ் சர்க்காரைப்பார்த்து. "தேசிய சர்க்கார் கொடுங்கள்" என்று கெஞ்சிப் பார்த்தார். மறுபடியும் எனக்கு ஒரு கண்டம் வந்ததென்று இராத் தூக்கமின்றிக் கிடந்தேன். நல்லவேளை ! அமெரி துரை அபயப் பிரதானம் அளித்தார். 'இல்லை' என்ற அவருடைய வழக்கமான பல்லவியைக் கேட்டபோது எனக்குக் கரைகாணா ஆனந்தமாயிருந்தது. பிழைத்தேன் என்று பெருமூச்சு விட்டேன். கிரிப்ஸ் தூது முதல் இப்படி நித்தியகண்டம் பூர்ணாயுசாக உயிர் வாழும் நான் இப்போது தங்களைச் சரணடைந்து விடுகிறேன். சமஸ்தான திவான் என்ற ஹோதாவில் தாங்கள் கொஞ்சம் பிரசங்கம் செய்தீர்களானால் ஜின்னா கைவிட்டாலும் அமெரி துரை சமஸ்தானங்களைக் காட்டி, "சமஸ்தானங்கள் கதி என்ன?" என்று சொல்லித் தட்டிக் கழிக்கப் பார்ப்பார். அமெரியும் நானும் உங்களைத்தான் நம்பிக் கிடக்கிறோம். நீங்களும் அதற்குத் தகுந்தாற் போல் முன் ஜாக்கிரதையாகவே சமஸ்தான விஷயமாகக் கொஞ்சம் பிரஸ்தாபப்படுத்தி 'கல்லாசம் பாதாம்' குட்டியிருக்கிறீர்கள்.

"சிந்து, வங்காளம், பஞ்சாப் முதலிய இடங்களுக்கெல்லாம் சுதந்தரம் கொடுக்கச் சம்மதிப்பவர்கள், அப்படியே சமஸ்தானங்களுக்கு உள்ள கொஞ்சம் சுதந்தரத்தையும் விட்டுக் கொடுப்பதற்கென்ன !" என்று பிடிகை போட்டு வைத்திருக்கிறீர்களே ! அதைப்பற்றிச் சந்தோஷம். உங்களைப் போன்றவர்கள் இல்லை யென்றால் அப்புறம் நான் தான் பிழைப்பது எப்படி?

இப்படிக்கு,

சிரஞ்சீவி அரசியல் மூட்டுக்கட்டை.

இதைக் கேட்டதும் சர்ச்சில் துரை ஒரு குதி குதித்து நமது மேஜையின்மீது ஒரு குத்து விட்டார்.

"இந்தியாவைக் கோட்டை விடுவதா? யார் சொன்னது? ஒருநாளும் இல்லை!" என்று தன் இரண்டு கைகளின் விரல்களையும் இறுக்கி மூடிக் கொண்டு காட்டினார்.

"சர்ச்சில் ஸார்! நீர் முஸோலினியை ஜயித்தீர்! ஹிட்லரை ஜயிக்கப் போகிறீர்! ஜப்பானையும் சிரமப்பட்டு ஜயித்து விடுவீர்! ஆனால், இந்தியாவின் அரை நிர்வாணப் பக்கிரி காந்தி இருக்கிறாரே, அவரை உம்மாலும் ஜயிக்க முடியாது; உமது மூதாதை லார்ட் ராண்டல்ப் சர்ச்சிலே வந்தாலும் ஜயிக்க முடியாது!"

"என்ன சொன்னீர்? காந்தியையா ஜயிக்க முடியாது? காந்தியை ஜயிப்பதுதானா பிரமாதம்? ஹிட்லரையும் டோஜோவையும் ஜயித்தவனுக்கு?"

"ஆம்; காந்தியை நீங்கள் ஜயிக்க முடியாதென்றுதான் சொல்கிறேன். ஹிட்லருடைய இரகசிய ஆயுதங்களுக்கு நீங்கள் பதில் ஆயுதங்கள் கண்டு பிடித்து ஜயித்து விடலாம். ஆனால் மகாத்மாவின் யுத்த ஆயுதங்களை எதிர்க்க உங்களிடம் ஆயுதங்கள் இல்லை. கிடைக்கப் போவதுமில்லை."

"அப்படி என்ன ஆயுதங்கள் அவரிடம் இருக்கின்றன? எங்கே ஒளித்து வைத்திருக்கிறார்?"

"ஒளிக்கவேண்டியது அவசியமே இல்லை. நாணயமும் சத்தியமும் அன்பும்தான் காந்திஜியின் ஆயுதங்கள். அவை உங்களிடம் இல்லை!"

"அவை அவரிடமே இருக்கட்டும்! இந்தியா எப்படி எங்கள் கையை விட்டுப் போகும்?"

"கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள். மகாத்மாவும் ஜின்னாவும் சந்திக்கப் போகிறார்கள் என்றதும், உங்களுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கிறதா, இல்லையா?"

"இல்லவே இல்லை!" என்று சொல்லிக்கொண்டே, சர்ச்சில் கொஞ்சம் வயிற்றைக் கையினால் பிடித்துக் கொண்டார்.

"அதனால்தான் லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை, 'பம்பாயில் இருபத்து நாலு பேர் தேசியக் கொடி பிடித்துக் கொண்டு போனது முஸ்லிம்களுக்கு விரோதமான காரியம்' என்று எழுதியிருக்கிறதாக்கும்!"

"ஆனாலும், காந்தி மறுபடியும் தமது ஸ்வரூபத்தைக் காட்டி விட்டாரே!"

"ஆமாம்; காந்திஜி தம் உண்மை ஸ்வரூபத்தைத்தான் காட்டியிருக்கிறார். அவர் என்ன சொன்னாலும் கேட்பதற்கு இந்தியாவில் லட்சக் கணக்கான ஜனங்கள் காத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும், ஆகஸ்டு 9ஐயைக் கொண்டாடுவதற்கு மகாத்மா என்ன திட்டத்தை வகுத்தார் பாருங்கள்! இருபத்து நாலு பேரைப் போலீஸாருக்கு முன்னாலேயே தெரிவித்து விட்டுப் பொது ஜனங்களுக்குத் தெரியப் படுத்தாமல் தேசியக் கொடி வணக்கம் செய்யச் சொன்னார்! இப்படிப் பட்டவரைத் தானே நீங்கள் யுத்த முயற்சிக்குத் தடை செய்பவரென்று இத்தனை நாளும் சிறையில் வைத்திருந்தீர்கள்?"

"என்ன இருந்தாலும் மனுஷர் போலீஸ் உத்தரவை மீறச் சொன்னாரல்லவா? அவரை என்ன செய்தால் தேவலை?"

"அவரைச் சமரசத்துக்கு அழைத்து அரசியல் பிரச்னையைத் தீர்த்தால் ரொம்பத் தேவலை."

"நடக்காத காரியம்."

"எத்தனையோ நடக்காத காரியங்கள் உலகத்திலே நடந்துதான் இருக்கின்றன."

"காந்தியைப் பற்றிப் பேசினால் நான் இங்கே இருக்கமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டு சர்ச்சில் எழுந்தார்.

"அதைவிடக் காந்திஜியுடனேயே நீங்கள் பேசிவிடுவது ரொம்ப நல்லதுதான்" என்றோம் நாம்.

"ஒருநாளும் இல்லை" என்றார் சர்ச்சில்.

"அப்புறம் உங்கள் இஷ்டம்; பெரிய யுத்தத்திலே ஜயித்துவிட்டுக் கடைசியில் இந்தியாவைக் கோட்டை விட வேண்டாம்!" என்றோம் நாம்.

"மியாவ்! மியாவ்!" என்றார் சர்ச்சில்.

அப்போதுதான், அத்தனை நேரமும் நமக்கு எதிரில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர் நமது ஆபீஸ் பூனையார் என்று தெரிய வந்தது.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "பெரிய ஜோசி" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: எஸ். அம்புஜம், கும்பகோணம்.

"அப்படியானால் சரி; இரண்டாவது போர்முனையில் காரியாதிகள் எப்படி நடக்கின்றன? சக்கைப்போடுதானே?"

"அப்படி உற்சாகமான விஷயமாகப் பேசும்! இரண்டாவது போர்முனையில் ஒரே அமர்க்களந்தான்! பாரிஸ் இன்னும் 60 மைல் தூரந்தான் இருக்கிறது; தெரியுமோ, இல்லையோ?"

"ஆம்; சர்ச்சில்வாள்! பிரிட்டிஷ் - அமெரிக்கப் படைகளின் தீரத்தைப் பார்த்து உலகமே ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறது."

"எல்லாம் என்னாலே தான், தெரியுமோ, இல்லையோ? நான் ஒருவன் மட்டும் இல்லாவிட்டால்..."

"சந்தேகம் என்ன? நீங்கள் இல்லாவிட்டால் உலகமே இதற்குள் குட்டிச் சுவராய்ப் போயிருக்கும்! நீங்கள் இருந்துங்கூட அல்லவா ஹிட்லர் மேலும் மேலும் புதிய டாங்கிப் படைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறாராம்?"

"ஆமாம்; அந்த 'மிலிடரி இடியட்'டுக்கு ஏதாவது தெரிந்தால்தானே? பாக்கியிருக்கும் டாங்கிகளைக் கிழக்குப் போர்முனைக்கு அனுப்பக் கூடாதோ?"

"ஹிட்லருக்குப் புத்தி இருந்தால் ருஷியாவிலேயே கால் வைத்திருக்க மாட்டான்! அந்த அகம்பாவி கிடக்கிறான்! நீங்கள் இரண்டாவது போர்முனையிலிருந்து நேரே இங்கே வந்தீர்களா? அல்லது வழியில்......?"

"வழியிலே இதாலிப் போர்க்களத்தையும் ஒரு கழுகுப் பார்வை பார்த்தேன்!"

"அங்கே எப்படி?"

"எல்லாம் திவ்யமாய் நடக்கிறது. நமது படைகள் பிரமாதமான நிதானத்துடன் முன்னேறுகின்றன."

"அப்புறம் நேரே எங்கே போனீர்கள்?"

"அஸ்ஸாம் எல்லைப் புறத்துக்குப் போனேன். நான் அங்கே போவதற்குள் ஒரு ஜப்பானியன் கூட இல்லாமல் விழுந்தடித்து ஓடிப்போய் விட்டான்!"

"இப்படியாக, எங்கே பார்த்தாலும் நமது நேசக் கட்சிக்கு ஒரே வெற்றி தான்போலிருக்கிறது. சந்தோஷம்!"

"இப்பேர்ப்பட்ட வெற்றிகளையெல்லாம் அடைந்திருக்கும் எனக்கு நூறு வயது என்கிறீரே! எப்படிப் போதும்? இந்த வெற்றிகளை நன்றாக அனுபவித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஆள்வதற்கு நூறு வயது போதுமா?"

"சர்ச்சில், ஸார்! யுத்தம் முடிந்து சில வருஷத்துக்குள் வேறு விதமாக எண்ணுவீர்கள்."

"ஏன்? எப்படி? எதனால்?"

"துரைவாள்! முன் யுத்தத்தில் ஜயித்த லாயிட் ஜார்ஜ் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?"

"உருளைக் கிழங்கு பயிர் செய்கிறார்!"

"அவர் யுத்தத்தில் ஜயித்ததை இப்போது யாராவது நினைத்துக்கொண்டிருக்கிறார்களா?"

"அந்த மாதிரியா என் விஷயம்? நான் எப்பேர்ப்பட்ட நெருக்கடியான சமயத்தில்......"

"லாயிட் ஜார்ஜும் நெருக்கடியான சமயத்தில்தான் முதன் மந்திரியானார். அவரைப் போல்தான் நீங்களும் யுத்தத்தில் ஜயித்த சில வருஷத்துக்கெல்லாம் எங்கேயாவது செங்கல் காளவாய் போடும்படி வரும்!"

"அவ்வளவு சீக்கிரம் ஜனங்கள் என்னை மறந்து விடுவார்களா?"

"மறக்க மாட்டார்கள்! ஆனால் நீங்கள் செங்கல் காளவாய் போடும் போது அந்த வழியாய்ப் போகிறவர்கள், 'சர்ச்சில் யுத்தத்தில் என்னமோ ஜயித்தான்; ஆனால் சமாதானத்தைக் கோட்டை விட்டு விட்டான்' என்று சொல்லிக்கொண்டு போவார்கள்."

"அப்படியா சொல்வார்கள்? ஜெர்மனியையும் ஜப்பானையும் ஜயித்த என்னை?"

"இன்னும் கேவலமாய்க்கூடப் பேசுவார்கள். 'என்ன பிரமாதமாய் ஜயித்து விட்டான்? ருஷியாவின் உதவியால் ஜெர்மனியை ஜயித்தான். அமெரிக்காவின் உதவியால் ஜப்பானை ஜயித்தான்' என்பார்கள்."

"அட பாவிகளா? அப்படியும் சொல்வார்களா?"

"இன்னும் கூடச் சொல்வார்கள். 'யுத்தத்தில் ஜயித்து என்ன பிரயோஜனம்? ஜயித்த பிறகு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு விதை போட்டு விட்டான். இந்தியாவைக் கோட்டை விட்டு விட்டான்!' என்றும் சொல்வார்கள்."

கோட்டை வீராதிர்!

பட், பட், படார் என்று கதவை இடிக்கும் சத்தம் கேட்டது. இவ்வளவு வலிமையுடன் கதவை இடிக்கும் சக்தி படைத்தவர் இந்தப் பரந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளே ஒருவர்தான் உண்டு என்று அறிவோமாதலால், "வாரும், ஐயா! சர்ச்சில் துரையே! உமக்கு வயது நூறு!" என்றோம்.

"வயது நூறுதானா? பாக்கி யெல்லாம் எங்கே போச்சு?" என்று கேட்டுக் கொண்டே சர்ச்சில் வந்து நமக்கு எதிரே உட்கார்ந்தார்.

"அப்படியா? நூறு வயது போதாதா? அதுவும், இந்தக் காலத்திலே, — நாலா பக்கமும் பறக்கும் குண்டுகள் பறந்து வந்து விழுந்து கொண்டிருக்கும்போது......"

"பறக்கும் குண்டை உடைப்பிலே போடச் சொல்லும்!" என்றார் சர்ச்சில்.

"நான் சொல்லிக்கொண்டுதானிருக்கிறேன். அந்த முட்டாள்கள் ஊரிலே கொண்டு வந்து போடுகிறார்கள்......"

"போடட்டும், போடட்டும்! அவ்வளவுக்கவ்வளவு ஜெர்மனிக்குள்ளே புகுந்து துவம்ச துவம்சம் செய்யாவிட்டால்......"

"உங்களால் முடியாது, ஐயா, முடியாது?"

"என்ன முடியாது என்கிறீர்?" என்று சர்ச்சில் கோபாக்கிரந்தராய்க் கேட்டபோது, அவருடைய கண்களிலிருந்து குபீரென்று தீப் பொறிகள் கிளம்பி மேல் கூரை வரையில் பறந்து கீழே விழுந்தன.

நிதானித்துப் பார்த்ததில் அந்தத் தீப் பொறிகள் சர்ச்சிலின் சுருட்டிலிருந்து கிளம்பியவை என்று தெரிந்தது.

"ஐயா! பறக்கும் குண்டுகளைக் காட்டிலும் உம்முடைய சுருட்டுப் பொறிகளினால் அபாயம் அதிகமாயிருக்கிறதே! தயவு செய்து சுருட்டைக் கீழே போட்டால், அப்புறம் சாவகாசமாகப் பேசலாம்" என்றோம்.

சர்ச்சில் சுருட்டைக் கீழே போட்டு ஒரு மிதி மிதித்தார்.

"இந்த மாதிரி ஜெர்மனியையும் துவம்சம் செய்வேன்!" என்றார்.

"முடியாது" என்றோம் மறுபடியும்.

"எனக்கு அவ்வளவு சக்தி இல்லை யென்றா சொல்கிறீர்? சாம்ராஜ்யத் துரோகம்!"

"அப்படிச் சொல்லவில்லை, துரையே! ஜெர்மனியை மட்டும் அல்ல; உலகத்தையே துவம்சம் செய்து விடும் சக்தி உங்களுக்கு உண்டு. ஆனாலும் ஜெர்மனியை துவம்சம் செய்ய உங்களால் முடியாது; ஏனென்றால், நீங்கள் துவம்சம் செய்வதற்கு ஸ்டாலின் அங்கே ஏதாவது பாக்கி வைத்திருந்தால்தானே?"

"ஹா!" என்றார் சர்ச்சில்.

"ஹா! ஹா!" என்றோம் நாம்.

"அந்தப் பாவி பெயரைச் சொல்லாதே!"

"யார்? ஸ்டாலின் பெயரையா?"

"இல்லை, இல்லை! 'ஹா ஹா' பெயரைச் சொன்னேன். ஸ்டாலின் என் அன்பார்ந்த அருமைத் தோழர் ஆயிற்றே?"

"அப்படியிருந்தும், அவர் உங்களை முந்திக்கொண்டு ஜெர்மனியை துவம்சம் செய்யப் பார்க்கிறாரே? இதோ ஜெர்மன் எல்லையைத் தாண்டி உள்ளே நுழைந்து விட்டாரே! மனுஷ்யர் உங்களைப் போலந்தில் காலை வாரி விட்டது போல......!"

"யார்? என்னையா?"

"ஆமாம்; நீங்கள் லண்டனில் இந்த யுத்தம் ஆரம்பித்த போதே ஒரு போலந்து சர்க்காரை நியமித்துப் பத்திரமாய்ப் பெட்டிக்குள்ளே வைத்துப் பாதுகாத்து வந்திருக்கிறீர்கள். அப்படியிருக்க, உங்கள் அன்பார்ந்த தோழர் ஸ்டாலின் என்ன செய்தார்? போலந்தில் பாதியைப் பிடித்ததும் உங்களுக்கும் உங்கள் போலிஷ் சர்க்காருக்கும் நாமத்தைப் போட்டு விட்டு, அவர் பாட்டுக்கு ஒரு புது போலிஷ் சர்க்காரை, தாம் சொன்னபடி ஆடும் சர்க்காரை, ஏற்படுத்தி விட்டாரோ, இல்லையோ? அந்த மாதிரி ஜெர்மனிக்குள்ளேயும் புகுந்து தம் இஷ்டப்படி ஒரு பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்தி விட்டால்?..."

"வேண்டாம்! நிறுத்தும்! இந்த அசந்துஷ்டியான விஷயத்தை விட்டு வேறு ஏதாவது சொல்லும்!"

கொண்டு போய்க் குருட்டு பக்தியாகச் செய்து கொண்டால், அதுவே பலவீனமாக மாறிவிடும். குருட்டு பக்தியினால் இனங்களுக்கும் நன்மை இல்லை, தலைவர்களும் அதை எதிர்பார்க்கவில்லை என்பதை நமது முஸ்லிம் சகோதரர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறோம்.

பகுத்தறிவும் வேண்டும்

தலைவர்களிடம் பக்தி வேண்டியது தான்; ஆனால் அது காரணமாக நமது பகுத்தறிவையே இழந்துவிடக் கூடாது. தலைவர்களுடைய கொள்கைகளோ, காரியத் திட்டங்களோ தவறுதலானவை என்று நமக்குப் பட்டால், அதையும் தைரியமாக வெளியிட வேண்டியது தான். இது மட்டுமல்ல; சில சமயங்களில் ஒரு தலைவரை ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வேறு தலைவரைத் தேர்ந்தெடுப்பதும் அவசியமாகலாம். வளரும் சமூகம், — முன்னேற்றத்தை விரும்பும் சமூகம், — தலைவர்களுடைய திட்டங்களைப் பற்றிச் சிந்தனை செய்யவும் தலைவர்களையே மாற்றிக் கொள்ளவும் தயாராயிருக்க வேண்டும். யுத்த ஆரம்பத்தில் இங்கிலாந்தும், சமீபத்தில் ஜப்பானும் அம்மாதிரி செய்திருக்கின்றன.

காங்கிரஸை எதிர்த்தோம்


முஸ்லிம் சகோதரர்களுக்கு நாம் இப்போது சொல்வதைச் சென்ற மூன்று வருஷமாக நாமே அனுசரித்தோம் என்பதையும் ஞாபகப் படுத்த விரும்புகிறோம். காங்கிரஸிடமும் காந்திஜியிடமும் நமக்கு என்றும் அழியாத எல்லையற்ற பக்தியிருந்தும், காங்கிரஸ் வேலைத் திட்டத்தை மாற்ற வேண்டும் என்று வற்புறுத்தினோம். யுத்த விஷயத்தில் காந்திஜியின் அஹிம்சைத் திட்டத்தை எதிர்த்தோம். ஜனாப் ஜின்னாவுடனும் முஸ்லிம் லீகுடனும் எப்படியும் சமரசம் செய்து கொள்ள வேண்டுமென்று இடைவிடாது கூறி வந்தோம். பண்டித ஜவாஹர்லால்ஜியின் அயல்நாட்டுக் கொள்கையையும், மௌலானா ஆஸாதின் காரியங்களையும் பலமாகக் கண்டித்தோம். இதனாலெல்லாம், அந்தப் பெரியார்களிடம் நமது பக்தியும் மரியாதையும் என்னளவும் குறைந்து விடவில்லை.

முற்றும் தவறு


அதே முறையைத்தான் இன்று ஜனாப் ஜின்னா விஷயத்தில் நாம் அனுசரிக்கிறோம். அதையே நமது முஸ்லிம் சகோதரர்களுக்கும் சிபார்சு செய்கிறோம். எத்தனையோ ஹிந்து சமூகத் தலைவர்களின் கடுங் கோபத்துக்குப் பாத்திரமாகி, மகாத்மா காந்தி, தேசப் பிரிவினைக் கொள்கையை ஒப்புக் கொண்டு சமரசத்துக்கு இணங்கியிருக்கும் சமயத்தில், ஜனாப் ஜின்னாவின் லாகூர்ப் பேச்சின் தோரணை மிகக் கேடானது என்று நாம் கருதினோம்; இன்னமும் கருதுகிறோம். "பாகிஸ்தான் பாதுஷா" என்னும் நாடகத்தில் பரிகசிக்கப் பட்டிருப்பது ஜனாப் ஜின்னாவின் பேச்சுத் தோரணையேயாகும். மற்றப்படி, ஜனாப் ஜின்னாவை அந்தக் கட்டுரையில் அவமதித்திருப்பதாக எண்ணுவது முற்றும் தவறு. அப்படித் தவறாக எண்ணி மனவருத்தத்துக்கு ஆளான முஸ்லிம் நண்பர்களுக்கு நமது மனமார்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தந்தி பறக்கட்டும்!

இந்தச் சந்தர்ப்பத்தில் நமது முஸ்லிம் சகோதரர்கள் செய்ய வேண்டியது என்ன? ஜனாப் ஜின்னாவுக்குத் தந்தி மேல் தந்தி கொடுக்க வேண்டும். "ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கும் தேச விடுதலைக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கைவிட வேண்டாம். மகாத்மா இவ்வளவு தூரம் இணங்கி வந்திருக்கும் போது, இன்னமும் தகராறை வளர்த்தாமல் எப்படியாவது சமரசம் செய்து கொள்ள வேண்டும்" என்று தேசத்தின் நாலா புறங்களிலிருந்தும் ஜனாப் ஜின்னாவுக்குத் தந்தி பறக்க வேண்டும். தலைவரிடம் உள்ள பக்தியோடு கூடச் சொந்த அபிப்பிராயத்தையும் வற்புறுத்திக் கூறும் சந்தர்ப்பம் இப்போது முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.


கிரிப்ஸ்திட்டம் அப்படியே நிற்கிறது என்கிறார் அமெரி. நிற்பதோடுமட்டுமல்ல,
இந்திய சுதந்திரத்துக்குக் குறுக்கே நிற்கிறது என்கிறார் ராஜாஜி.
கிரிப்ஸ் திட்டம்


ரஷ்ய
சேனை
ரஷ்யசேனை ஜெர்மனிக்குள்
புகுந்து விட்டது.


கோரிக்கைகள்
அகில இந்தியாவின் கண்களும்
இன்று காந்திஜி-ஜின்னா சந்திப்பை
எதிர்நோக்குகின்றன.


இந்தியா
பஞ்சம் இந்த வருஷமும் விஜயம்
செய்து இந்தியாவின் கதவைத்
தட்டப்போவதாக விஷயமறிந்த பலர்
எச்சரிக்கை செய்து வருகிறார்கள்.

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 2

என்ன சேதி?

பின் வாங்காதீர் !


தமிழ் மக்களுக்குத்தான் சொல்லுகிறோம். தயவு செய்து பின் வாங்காதீர்கள். அக்டோபர் 2உ நெருங்கிக் கொண்டிருக்கிறது. அன்றைய தினம் மகாத்மாவிடம் சமர்ப்பிக்க வேண்டிய கஸ்தூரிபா நிதி பெருகிக் கொண்டிருக்கிறது. கடைசியாக வெளியான ஜாபிதாவின்படி, இந்தியாவின் மாகாணங்களுக்குள்ளே தமிழ்நாடு நாலாவது ஸ்தானத்தை வகித்தது. இந்த ஸ்தானத்துக்காவது இனிமேல் பின் வாங்காமலிருக்க வேண்டும் என்றுதான் தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். "ஆரம்ப சூரர்கள்" என்ற பெயர் நமக்கு வேண்டாம். மற்ற மாகாணங்கள் நம்மை முந்திக் கொள்ள இடம் கொடுக்கக் கூடாது. தமிழ்நாட்டில் மொத்தம் வசூலாக வேண்டியது 7 லக்ஷம். இதுவரை சேர்ந்திருப்பது ரூ. 2,80,000; அதாவது பாதிக்கும் குறைவுதான். கொஞ்சம் சுறுசுறுப்பாகக் கச்சம் கட்டிக்கொண்டு உழைக்கும்படி தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். மாகாண விகிதாசாரத்தை முதன் முதலில் பூர்த்தி செய்த பெருமை தமிழ் நாட்டுக்கே கிடைக்கும்படி செய்யக் கோருகிறோம். "கல்கி"யைப் படிக்கும் நேயர் ஒவ்வொருவருக்கும் 'கஸ்தூரிபா நிதி'க்குப் பணம் கொடுத்த பாக்கியம் கிட்ட வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறோம்.

ஜின்னாவின் வேண்டுகோள்

சென்ற "கல்கி" இதழ் அச்சாகி வெளியான பிறகு, ஜனாப் ஜின்னா பத்திரிகைகளுக்கும் பொதுஜனத் தலைவர்களுக்கும் விடுத்திருக்கும் வேண்டுகோள் வெளியாயிற்று. "எல்லா விவாதங்களையும் நிறுத்தி வையுங்கள்; தேசத்தில் சிநேகபாவம் வளருவதற்கு உதவி செய்யுங்கள்" என்று ஜனாப் ஜின்னா வேண்டிக் கொண்டிருக்கிறார். ரொம்ப சந்தோஷம். ஜனாப் ஜின்னாவின் வேண்டுகோளுக்கு நாம் பூரண மரியாதை அளித்து அந்தப்படியே செய்யத் தயாராயிருக்கிறோம். இந்த வேண்டுகோளை ஜனாப் ஜின்னா 6உ வரை காத்திருந்து வெளியிடாமல் இன்னும் இரண்டு நாள் முன்னதாகவே வெளியிட்டிருந்தால், சென்ற "கல்கி" இதழில் "பாகிஸ்தான் பாதுஷா" வெளியாகியிராது. அதைக் காட்டிலும் முக்கியமாக, ஜனாப் ஜின்னா நமக்கு இப்போது சிபார்சு செய்திருக்கும் முறையைத் தாமே கடைப்பிடித்து, லாகூர் முஸ்லிம் லீக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர்களைப் பற்றி மரியாதையாகவும் சிநேகபாவம் வளரும்படியும் பேசியிருந்தால் சர்வ சௌக்கியமாயிருந்திருக்கும். அவர் இம்மாதிரி வேண்டுகோள் இப்போது விடுவதற்கே அவசியம் இருந்திராது.

பக்தி வேண்டும்

சென்ற "கல்கி" இதழில் வெளியான "பாகிஸ்தான் பாதுஷா" என்னும் நாடகத்தைப் பற்றி ஆட்சேபித்து நமது முஸ்லிம் நண்பர்கள் சிலர் கடுமையாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். தங்களுடைய சமூகத் தலைவரிடம் அவர்கள் வைத்திருக்கும் பக்தியை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். இந்த பக்திதான் முஸ்லிம் சமூகத்தின் பெரிய பலமாகும். ஆனால் அந்த பக்தியை அளவு மீறிக்



சமையல் வேலைகளை
சீர்படுத்த வருகிறது



காமதேனு
வனஸ்பதி

தயாரிப்பாளர்கள்:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.

மேட்டூர்டம் — தென்னிந்தியா

KVC.I.T.M.

மானேஜிங் ஏஜண்டுகள்:
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.,
திருச்சிராப்பள்ளி.

சோல் விற்பனை ஏஜண்டுகள்:
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூடர்ஸ்
லிட்., 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

கல்கி
பொருளடக்கம்


மலர் 4 இதழ் 2 | 1944 ஆகஸ்டு 13 | தாரண ௵ ஆடி 29

என்ன இருந்தாலும், இந்தச் சென்னை யுனிவர்ஸிடியைப்போல் நன்றியில்லாத யுனிவர்ஸிடியை நாம் பார்த்தது கிடையாது. ஏற்கெனவே ஒரு டாக்டர் பட்டமும் 'வள்ளல்' பட்டமும் பெற்றுள்ள கோட்டையூர் அளகப்பச் செட்டியாரிடம் மூன்று லட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டு காலணாப் பெறாத இன்னொரு டாக்டர் பட்டத்தை அளித்தார்கள்! மேற்படி தொகையைச் சிபார்சு செய்து வாங்கிக் கொடுத்த நமக்கு ஒரு 'கம்பவுண்டர்' பட்டமாவது கொடுத்தார்களா? கிடையாது!



போகட்டும்; டாக்டர் டாக்டர் அளகப்பச் செட்டியார்தான் நாம் சொல்வதைக் கேட்கிறாரா என்றால், அதுவும் இல்லை! "அவர் மேலே மேலே தர்மங்களைச் செய்துகொண்டே போனால் எந்தப் பத்திரிகையில்தான் போட இடமிருக்கும்? அவரே ஒரு சொந்தப் பத்திரிகை ஆரம்பித்து விடட்டும்" என்று சொன்னோம். மனுஷர் கேட்கவில்லை; தர்மம் செய்வதையும் நிறுத்தவில்லை. "பணம் சம்பாதித்ததற்குப் பிராயச்சித்தம் தர்மம் செய்வதுதான்" என்று வேறே சொல்லி, மற்றவர்களையும் தூண்டிவிடப் பார்க்கிறார்!

இந்தத் 'தர்ம' சங்கடத்துக்கு நாமும் ஒரு வழி ஆலோசித்துக் கண்டுபிடித்தோம். பத்திரிகைக்குள்ளே எப்படியும் இடம் கொடுப்பதில்லை யென்று தீர்மானித்து, ஸ்ரீ அளகப்பச் செட்டியாரை அட்டையிலேயே தூக்கிப் போட்டு விட்டோம். மற்றப் பணக்காரர்களுக்கெல்லாம் ஒரு எச்சரிக்கையாயிருக்கட்டும் என்றுதான்!



அவன் ஊக்கங் குறையாமல் இருக்கச் செய்வது உங்கள் வேலை!



தாய்மார்களே: உங்கள் குடும்பத்திற்கு ஒவ்வொரு நாளும் சமையல் செய்யும்போதும் உங்களால் எவ்வளவு செய்யலாமென்பதை உணர்கிறீர்களா? உங்கள் சமையல் திட்டங்களில், அவைகளைத் தயாரிக்கும் முறையிலுமே உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமான ஊக்கத்தைப் பெறுவதோ, அல்லது ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் ஊக்கமற்றவர்களாக ஆவதோ இருக்கிறது. இது சமைப்பதை மேலும் உற்சாகமுள்ளதாகவும், முக்கியமானதாகவும் செய்கிறதில்லையா? உணவுகள் ஊக்கமளிக்கும் தரத்தில் வேற்றுமையுள்ளவை. அதிக ஊக்கமளிப்பவை சில. வெறும் ருசியும், திருப்தியுமளிக்கக் கூடியவை சில. அந்த உணவு உண்டும் அநேகர் ஊக்கமற்றுக் காணப்படுவது இதனால்தான். ஆனால் எல்லா உணவுகளையும் அதிக ஊக்கமுள்ளதாகச் செய்துவிடலாம். அவைகளை வைடமின் நிரம்பிய டால்டாவைக் கொண்டு தயார் செய்வது இதற்கு உதவியாயிருக்கும். டால்டா இயற்கையின் முக்கியமான "உணவு சத்துக்களை" அளிக்கிறது—இந்த சத்துக்கள் நாம் சாதாரணமாக சாப்பிடும் உணவுகளில் மிகக் குறைவு.



வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO. LTD.